

திருவள்ளுவர் திருக்குறள்

சமயப் புரட்சி

தா. இளஞ்சேமனார்

அமிழ்தம் பதிப்பகம்

திருவள்ளுவர் கண்ட சமயப் புரட்சி

செந்தமிழ் அந்தணர்

இரா. இளங்குமரனார்

அமிழ்தம் பதிப்பகம்

நூற் குறிப்பு

நூற்பெயர்	**திருவள்ளுவர் கண்ட சமயப் புரட்சி**
ஆசிரியர்	**இரா. இளங்குமரனார்**
பதிப்பாளர்	இ. வளர்மதி
முதல் பதிப்பு	2004
தாள்	11.6 வெள்ளை மேப்லித்தோ
அளவு	1/16 கிரௌன்
எழுத்து	12 புள்ளி
பக்கம்	6 + 82 = 88
படிகள்	1000
விலை	உரு. 40
நூலாக்கம்	பாவாணர் கணினி 2, சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர், சென்னை - 17.
அட்டை வடிவமைப்பு	அமுதோன்
அச்சு	வெங்கடேசுவரா ஆப்செட் 20 அஜீஸ் முல்க் 5வது தெரு ஆயிரம் விளக்கு, சென்னை - 6.
கட்டமைப்பு	இயல்பு
வெளியீடு	**அமிழ்தம் பதிப்பகம்,** எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராயர் நகர், சென்னை - 17 தொ.பே : 5518 3162
நூல்கள் கிடைக்குமிடம்	**தமிழ்மண் பதிப்பகம்,** 2 சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர், சென்னை - 17 தொ.பே : 5538 9712

உள் விளக்கம்

திருவள்ளுவர் கண்ட சமயப்புரட்சி என்பது இச் சுவடியின் **முதற் கட்டுரை** நூற் பெயரீடு அது வாயது.

இக் கட்டுரையைத் தொடுத்து, **பதின்மூன்று** கட்டுரைகள் உள.

முன்னை மூன்று கட்டுரைகளும் ஆழ்ந்த ஆய்வு வழிப்பட்டவை.

பின்னையமைந்த பதினொரு கட்டுரைகளும், திருக்குறள் இக்கால உலகியல் வாழ்வுக்கும் அரசியல் வாழ்வுக்கும் வழிகாட்டியாம் **கலங்கரை விளக்கமாகத் திகழ்வதைக் காட்டுவன.**

எத்தனை எத்தனை மாற்றங்கள் கண்டுபிடிப்புகள் அறிவு முதிர்ச்சி ஏற்படினும் வாய்மைக்குறள் வழிகாட்டியாக நின்று நிலவுதலை வெளிப்படுத்தி வள்ளுவ நிலைபேற்று நிலையை விளக்குவன.

இச் சுவடியால் ஆகும் பயனுக்கு, முன்னின்று வழங்கும் பெருந்தகை வெளியீட்டாளர் அமிழ்தம் பதிப்பக உரிமையாளர் திருவாட்டி **இ.வளர் மதியர்க்கு** நேயமிகு நன்றியுடையேன்.

அன்புடன்

இரா. இளங்குமரன்

பதிப்புரை

“ஆய்வு, ஆராய்வு இரண்டும் பழந்தமிழ்ச் சொற்கள். ஆய்வு என்பது பொதுமக்கள் வழக்கில் உள்ள சொல். கீரை யாய்தல், கொத்தவரை ஆய்தல் என்பவை கீரையிலும், கொத்தவரையிலும் கொள்ளுவ கொண்டு, தள்ளுவ தள்ளலாம் செயற்பாட்டைக் குறிப்பதே.

ஆய்தம் ஓர் எழுத்து. தமிழ் எழுத்துகளிலேயே நுண்ணிய ஒலியுடையது ஆய்தமாகும். அந்த ஆய்த ஒலியினும் குறுகிய ஒலியுடையது ஆய்தக் குறுக்கமாகும். ஆதலால், ஆசிரியர் தொல்காப்பியர் *ஆய்தம் என்பது உள்ளதன் நுணுக்கம் என்று* கூறியுள்ளார்” இவ்வாறு ஆய்வு பற்றி விரிவாக ஆழமாக ஆய்ந்து சொல்பவர் அரிய பெரிய ஆய்வுகள் பலவற்றை வழங்கியுள்ள ஐயா இளங்குமரனார், ஆய்வாளர்கள் அத்துறையில் ஆழப் பதியவும், அகல உழவும், எண்ணிய அரிய ஆய்வுகள் பலவற்றைப் பல்வேறு நூல்களாக வெளியிட்டுள்ளார்.

திருக்குறள் தொடர்பாக மட்டும் நாலாயிரம் பக்கங்களுக்கு மேற்பட்ட அறுபது நூல்களைச் செய்தவர். பழந்தமிழ் இலக்கண இலக்கிய ஆய்வுகளை மேற்கொண் டவர். புதுத் தமிழ் வளர்ப்பாளி, கலைச்சொல்லாக்கி. இளைய தலைமுறைக்கான தேவைகளை உணர்ந்து அவர்களின் வாழ்வைப் பண்படுத்தத் தக்க நூல்களை தம் வாழ்நாள் முழுதும் ஓயாது, ஒழியாது ஆக்கி வருபவர். அவர்தம் படைப்புகள் பலவற்றையும் ஒருங்கு திரட்டி ஒரே வேளையில் பற்பல சுவடிகளாக **‘அமிழ்தம் பதிப்பகம்’** வழங்கும் வாய்ப்பை எண்ணி மட்டிலா மகிழ்ச்சி அடைகிறது. மேலும் மேலும் ஆய்வாளர்களுக்கு

அருந்துணை புரியும் அந்நூல்களை வெளியிட விரும்பிக் காத்திருக்கிறது.

இந்நூல்கள் தமிழ்மொழியின் மரபையும், பரப்பை யும் புலப்படச் செய்வன. ஊரும், உலகமும் சொந்தம் கொண்டாடத்தக்கன. இப் பெரும்புலவரின் நூல்களைக் கற்பதின்வழி பண்பாடு காக்கும் படிப்பாளிகளாக, தமிழர் பெருமையை நிலைநிறுத்தும் தலைவர்களாக இன்றைய இளைஞர்கள் உருவாக முடியும் என்று நம்புகிறோம்.

கற்கின்ற இருபாலீர்!
தமிழ்நாட்டின் கண்ணெனாப்பீர்
கனியி ருக்க
நிற்கின்ற நெடுமரத்தில்
காய்கவர நினையாதீர்
மூது ணர்வால்
முற்கண்ட எவற்றினுக்கும்
முதலான நந்தமிழை
இகழ்த லின்றிக்
கற்கண்டாய் நினைத்தின்பம்
கைக்கொண்டு வாழ்ந்திடுவீர்
நன்றே என்றும்.

எனும் **பாவேந்தர்** வரிகளை நெஞ்சில் நிறுத்துவீர்!

இப்பணியில் துணைநின்று என் வாழ்விலும் தாழ்விலும் முழுப் பங்களிப்புச் செய்கின்ற உடன் பிறவா இளவல்கள், **அ. மதிவாணன், கி. குணத்தொகையன்** ஆகியோர்க்கு நன்றியுடையேன்.

என்றும் நன்றிக்குரியோர் : திருவாளர்கள் குப்பு சாமி, சரவணன், கலையரசன், பிரியா, பட்டு; அழுதோன், விசயன், இனியன், கிட்டான்; மா.து. ராசுகுமார், மு. வையா புரி, ஸ்ரீ. பிரேம்குமார், லோ. கலையரசி, கோகிலா; தனசேகரன், எம்.கே. எண்டர்பிரைசஸ், வெங்கடேசுவரா ஆப்செட், குமரேசன், நா. வெங்கடேசன்.

- பதிப்பாளர்

உள்ளுறை

உள்விளக்கம் iii

பதிப்புரை iv

நூல்

1. திருவள்ளுவர் கண்ட சமயப்புரட்சி 1
2. திருவள்ளுவர் கண்ட சமய நடுநிலை 9
3. திருவள்ளுவர் காட்டும் நிலையாமை 24
4. நெறியமைந்த நெடுவாழ்வு 31
5. பொதுநலம் போற்றல் 35
6. நோய் நாடலும் நோய்முதல் நாடலும் 40
7. துறைத்தேர்வும் திருக்குறளும் 46
8. இனிப்பும் கசப்பும் 50
9. ஒன்றானோம் வென்றானோம் 53
10. எதுபழி? எதுபுகழ்? 59
11. அறிவும் அழிவும் 64
12. முறைகாவலும் முறைகேடும் 68
13. பிறன்பழியும் தன்பழியும் 74
14. கடிந்தவை கடிதல் 79

1. திருவள்ளுவர் கண்ட சமயப் புரட்சி

சமயமும் புரட்சியும்

'சமயப்புரட்சி' என்பதிலுள்ள சமயம், புரட்சி என்னும் இரண்டு சொற்களுமே திருக்குறளில் இடம் பெறாதவை. அன்றியும் திருக்குறளுக்கு முந்து நூல் களிலும் இடம் பெறாதவை. சமயம் என்பதைக் குறிக்கும் மற்றொரு சொல்லான 'மதம்' என்பதும் அக்காலத்து வழக்குப் பெறாததே.

திருக்குறளுக்குப் பிற்பட்ட நூலாம் மணி மேகலையில் 'சமயம்' என்னும் சொல்லாட்சியும் சமயப்பெயர்கள் சிலவும் இடம் பெற்றுள. 'சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை' என்னும் காதைப் பெயரே, இதனைத் தெரிவிக்கும்.

புரட்சி என்பது சிறுமாறுதல் அன்று; தலைகீழ்ப் பெருமாற்றம் ஆகும். புரட்டு, புரட்டுதல், புரளல் என்பன புரட்சி என்பதன் பொருளை விளக்கும். இக் காலத்தில் அரசியற் புரட்சி, தொழிற் புரட்சி, குமுகாயப் புரட்சி, அறிவியற் புரட்சி, பகுமைப் புரட்சி எனப் பல்வேறு புரட்சிகள் பெருவரவாக வழங்குகின்றன.

இச் சொற்கள் இல்லாமையால் சமயம் இல்லை என்றோ, புரட்சி நிகழவில்லை என்றோ கொள்ள வேண்டியதில்லை! மிக முற்பட்ட சிந்துவெளி நாகரிக மும், அதற்கு முற்பட்ட குமரிக்கண்ட நாகரிகமும்

அவற்றின் மாற்றங்களும் அறிவார் சமயக் கொள்கை யும், புரட்சியும் இல்லெனச் சொல்லார். "முந்நீர் விழவின் நெடியோன்" என்பது புறப் பாடல்களுள்ளும் மிகுபழம் பாடலேயன்றோ (9). அதனால், 'சமயம்' என்பதும் 'புரட்சி' என்பதும் சொற்குறி பெறாமல் பொருட்குறியாக இருந்த வள்ளுவர் காலப் புரட் சியையே நாம் இங்குக் காண்கிறோம்.

வள்ளுவர் காலச் சமயநிலை

வள்ளுவர் காலம், நாம் கொண்டிருக்கின்ற கி. மு. 31 என்பதாக உறுதிப்படுத்தினாலும் அக்காலத்திற்கு முன்னரே சமணமும் புத்தமும் பிறந்து விட்டவை; வேத நெறியும் விளங்கியது. தென்றமிழ் மாந்தரிடத்தும் விழவும், வழிபாடும் சிறந்து சமய மூலங்கள் கிளர்ந் திருந்தன. வள்ளுவர் காலத்தைப் பிற்படக் கொண்டு வருவார் கிறித்தவ சமயத்தோடும் இணைத்துப் பார்த்த லும் வழக்கில் உள்ளது. சிவனிய, மாலிய வழிபாடு மிக முற்படவே இருந்தும் அச் சமயப்பெயர்கள் அந்நாளில் அரும்பிற்றில்லை. எனினும் அச் சமயப் பின்னூல் களைக் கொண்டு சார்த்திப் பார்க்கும் பார்வையும் வழக்கில் உள்ளதே.

தமிழக வழிபாட்டு நிலை

தொல்காப்பியர் காலத்திற்கு முற்படவே, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலமக்களால் முறையே, மாயோன், சேயோன், வேந்தன், வண்ணன் வழிபாடு நிகழ்ந்தமை அறிய வாய்க்கின்றது.

மாயோன் முதலிய இப்பெயர்கள் திருக்குறளில் இடம்பெறவில்லை. வேந்தன் என்பது இடம் பெற்றிருந்

தாலும் அது மண்ணாளும் வேந்தனைக் குறித்ததன்றி விண்ணாள்வானைக் குறித்ததில்லை.

வேந்தன் என்னும் ஆட்சியுள்ள இருபது இடங்களில் ஒரே ஓர் இடத்தில் மட்டும் (899) இந்திரன் என உரை கண்டார் உளர். அஃது உரையாசிரியர் குறிப்பேயன்றி நூலாசிரியர் குறிப்பு ஆகாது. அவ்விடமும் அரசன் என்னும் பொருள் கொள்ளற்கு உரியதேயாம்.

"ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்" (899)

என்பதில் வேந்தன் அரசனே எனற்குத் தடையென்ன? வேந்தன் என்னும் வழக்குக்குரிய பொருளாட்சி விளங்க 'வேந்து' எனவும் வெளிப்படுத்திய இடமன்றோ இது.

தொல்காப்பியத்தில் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் மூன்றனையும் சுட்டி, அவை "கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வரும்" என்னும் குறிப்புமுள்ளது. முன்னே குறித்ததுபோலவே வள்ளுவத்தில் இந்நாற் சொற்களும் எங்கும் இடம் பெறவில்லை. 'கடவுள் வாழ்த்து' என்பது முதலதிகாரப் பெயராய் ஆங்கு உண்டு எனினும் அவ்விரு சொற்களும் அவ்வதிகாரத்தில் இடம் பெற்றில. கடவுள் என்பதோ நூலில் எவ்விடத்தும் இடம்பெறாச் சொல் ஆகும்.

கொற்றவை வழிபாடும் வேலவன் வெறியாடலும் தொல்காப்பியத்தில் இடம் பெறுவனவே. கொற்றம் என்பது வெற்றி என்னும் பொருளில் வள்ளுவரால் ஆளப்பட்டுள்ளது (583). 'கொற்றவை' என்னும் ஆட்சி ஆங்கில்லை. வெறி என்பது மணத்திற்கும் 'வெறிய' என்பது 'அறிவொடு படாத செயலுக்கும் வந்ததன்றி (133, 175) வெறியாடல் பொருளில் இடம் பெற்றில.

தொன்மக் கூறுகள்

இனிப் பாட்டு தொகை நூல்களில் இடம் பெற்றுள்ள செவ்வேள், திருமால், நீலமணிமிடற்றன், முக்கட் செல்வன், வால்வளை மேனியோன் இன்ன வாம் பெயர்க்குறிகள் திருக்குறளில் இடம் பெற்றில.

'தாமரைக் கண்ணான் உலகு' அடியளந்தான் தாயது' எனத் திருமாலைப் பற்றிய தொன்மக் குறிப்பு கள் இடம் பெற்றுள. ஆனால் "தாமரைக் கண்ணான் உலகத்தில் பெறக் கூடுவதாகக் கூறப்படும் இன்பம், தாம் வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதாமோ?" என வள்ளுவக் காதல் தலைவன் வியந்து உரைப்ப தாகவும் (1103), "அடியளந்தான் தாவியதாகச் சொல்லப் படும் நிலப்பரப்பை எல்லாம் அரசன் ஒருவன் அடை தல் அரிதன்று; மடியிலான் எனின் எய்தக்கூடும்" என ஊக்கி உரைப்பதாகவும் (610) அமைந்தனவே அல்லா மல் பிறவல்லவாம். அவை வள்ளுவர் சமயச் சார்பு சுட்டுவன எனின் மதிப்புக்குரியவையாம் இடங்கள் அவை அல்ல என்பதாம்.

மேலும், இப்பெயராட்சிகள் கடவுள் வாழ்த்தில் இடம் பெற்றில என்பதுமாம்.

நிகண்டில் சொல்லாட்சி

பின்னை நிகண்டில் இறையோன், பகவன், ஆதி என்னும் சிவன் பெயர்களும், அறிவன், அறவாழி அந்தணன் ஆதியங் கடவுள் பகவன், எண்குணன், பூமிசை நடந்தோன் என்னும் அருகன் பெயர்களும், பகவன், பூமிசை நடந்தோன், அறவ மூர்த்தி என்னும் புத்தன் பெயர்களும் (திவாகரம்) பிறவும் திருக்குறளில் இடம் பெற்றிருப்பதால் அவ்வச் சமயத்தின் பாற்படுத்

துவது பின்னூல் ஆட்சி கொண்டு முன்னூலை முடிவு செய்ததாகிவிடும். பின்னூலார் முன்னூற் சொற்களைத் தம் நூலில் தொகுத்துக் கொண்டனர் என்னல் தகும்!

"பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்" என வரும் சூடாமணி நிகண்டு கொண்டு ஐஞ்சமயத் தொடும் திருக்குறளைச் சார்த்திவிடுதல் தகுமா? "பட்டாரகன் மால் பங்கயன் பரமன், இரவி அருகன் புத்தனும் பகவன்" என்னும் பிங்கலம் கொண்டு மேலும் விரித்தல் ஒவ்வுமா?

திருவள்ளுவர் பார்வைப் பொதுமை

திருவள்ளுவர் தமிழில் நூல் செய்தவர்; தமிழ் நாட்டில் வாழ்ந்தவர், தமிழ் வேந்தர் காலத்தில் இருந்தவர்; எனினும் அத்தமிழ் பற்றியோ, தமிழ் நாடு பற்றியோ, தமிழ் வேந்தர் பற்றியோ சுட்டினார் அல்லர். ஆதலால், காலமும் இடமும் மொழியும் கடந்த பொது நிலைப் பார்வையில் தம் அற நூல் அமைதல் வேண்டும் எனத் திட்டப் படுத்திக் கொண்டு அவ்வழியில் நூல் யாத்தனர் என்பது கொள்ளக் கிடக்கும்.

வள்ளுவர் அவர் காலத்திற்கு முற்படவும், அவர் காலத்தின் அளவிலும் வழங்கிய நூல்களையெல்லாம் தொகுத்துக் கண்டவர் என்பது

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (322)

என்னும் அகச் சான்றால் விளங்கும். அத்தகு பேரறி வாளர் தாம் தொகுத்தறிந்த நூல்களில் இடம் பெற்ற கடவுளர் பெயர்கள், வழிபாட்டு முறை, சமயப் பெயர் ஆகியவற்றை அப்படி அப்படியே கொள்ளாமல் உலக நலங்கருதிய ஒருபெரும் பொதுமையில் கொண்டார்

என்பது முதலதிகாரத்தைப் பார்த்த அளவானே புலப்படும்.

கோயில், கோட்டம், பொதியில், மன்றம், அம்பலம் முதலிய இறையுறை இடப்பெயர்களோ, போற்றி, பலி, படையல், இசை, பூ, புகை, ஒளி முதலிய வழிபாட்டுக் குறிப்புகளோ, ஆடுநர், பூசகர், ஓதுநர் ஆகிய வழிபாட்டாளர் குறிப்புகளோ, திருக்குறளில் இடம் பெறவில்லை என்பது கொண்டே திருவள்ளுவர் எத்தகு விழிப்பொடு நூல் யாக்கிறார் என்பது விளங்கும்.

வானம் பொய்த்தால், வானத்தவர்க்குச் சிறப் பொடு பூசனை செல்லாது என்று வருவதில் உள்ள பூசனை பூசுதல் பொருளதாம். சிறப்பு என்பதற்குத் தேர்த் திருவிழா, பெருவிழா எனக் கொள்ள வேண்டுவ தில்லை. அக்காலப் பெருவழக்காக இருந்த விழவும் விழாவும் வள்ளுவரால் ஆளப்பட வில்லை என்பதை அறிந்தாலே உண்மை எண்மையாய் விளங்கும்.

வள்ளுவர், தம் காலத்தில் தாம் பல்வேறு சமய நூல்களை ஆய்ந்தறிந்திருந்தும் அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் புது நெறியாம் பொதுநெறி ஒன்றைத் தோற்றுவிப்பானேன் என்னும் எண்ணம் எவர்க்கும் எளிதில் தோன்றுவதாம்!

புரட்சிச்சீர்மை

நீரோடும் போக்கில் மிதவை ஓடும்; ஆனால், மீனோ நீரை எதிரிட்டு ஓடும்! எதிரிட்டு ஓடல் மீனின் இயற்கை. அப்படி எதிரிட்டே ஓட வேண்டும் என்பது அறவோர் - அறிவோர் புரட்சியாளர் நோக்கன்று, அப்படி எதிரிட்டுச் சென்றால்தான் உலகுக்கு ஆக்கம்

என்பதை அவர்கள் நூலறிவும், நுண்ணறிவும், உண்மை யறிவும், உலகியல் அறிவும், தெளிவிக்குமானால், உலகமே எதிரிட்டாலும் தமக்கு வரும் புகழோ, பழியோ, நலமோ, தீதோ கருதாமல் துணிவுடன் உரைப்பர். அவர்கள் நோக்கு உலக நலம் என்னும் ஒன்றேயாம். இவ்வரிய நோக்கிலேயே வள்ளுவரின் சமயப் புரட்சி அமைகின்றது. இல்லாக்கால் கள்ளுண் ணாமை, சூது, புலால் மறுத்தல், வரைவின் மகளிர் இன்னன வள்ளுவ வைப்பாக இயலுமோ?

சமயப்புரட்சியின் தேவை

சமயம் என்பவை நெறிப்படுத்தும் - பக்குவப் படுத்தும் - நோக்கிலே தோன்றியவை எனினும், அப் பணியளவில் அவை நின்றில. அவை, ஒன்றோடு ஒன்று முட்டிக் கொண்டன; மோதிக் கொண்டன; வெட்டிக் கொண்டன; வீழ்த்தவும் செய்தன. குறித்த ஒரு சமயத் துள்ளும் ஒருமைப்பாடு இல்லை. வழிபாட்டு முறை, கொள்கை விளக்கம், உரிமைப் போட்டி, இட இன மொழிப் பாகுபாடு இன்னவற்றால் ஒருமை கெட்டன; இவற்றைக் காண நேர்ந்த வள்ளுவர் உள்ளம் சமயப் புரட்சியை அவாவியிருக்கும்!

“அறிவினான் ஆகுவ துண்டோ பிறதினோய்
தந்நோய்போல் போற்றாக் கடை” (315)

என்பதை அறிந்த அருள் நெஞ்சமன்றோ அது.

கல்வியால் பெறுநலம், பெருநலமாம்; அது எந்நாடும் தம் நாடு; எவ்வூரும் தம் ஊர் என்பதன் வழியாக உண்டாகும், உலகோர் அனைவரும் ஒரொத்த உறவினர் என்னும் பிறப்புரிமைப் பெரு நோக்கு அது. அந்நோக்கை ஒப்பாமையும், பிறப்பு வழி

யாலும் தொழில் வழியாலும் பிரித்துக்காணல் முறை யெனக் கற்பித்தலும் சமயச் சரிவாகக் கொள்ளப் படாமல், சமயச்சால்பாகக் கொள்ளும் நிலை சமயத் தில் இடம் பெற்றிருத்தலை எண்ணியே வள்ளுவர் சமயப்புரட்சி கண்டார். அதனால், உலகிற்கு ஒரு புதுமையாய்ப் - புரட்சியாய் எச்சமயமும் சாராத பொதுமையாய்த் தாம் கருதிய சமுதாயத்தைப் படைத்தார். அதற்கென ஒரு பெயரும் சூட்டாமையால், நாம் அதனை 'வள்ளுவச் சமய'மெனக் கொள்ளும் கடப்பாடு உடையவராய் உள்ளோம்!

ஒருசமயம் சாராச் சமயச் சீர்மை

வள்ளுவச் சமயம், 'எம் சமய வழிப்பட்டது! எம் சமய வழிப் பட்டது!' எனப்பலரும் உரைத்து வருத லும், அவ்வுரைப்பும் வரவரப் பெருகி வருதலும் நாம் நன்கு அறிந்தவை. ஆனால், சமய நூல் ஒன்று ஓராயிர ஆண்டுகளுக்கு முன்னரே சமய வழியைச் சாராமல் மெய்ப்பொருள் கூறிய மேதகு நூல் திருக்குறள் என்று கூறுகின்றது.

அது, கல்லாடம் என்பது,

"சமயக் கணக்கர் மதிவழிக் கூறா(து)
உலகியல் கூறிப் பொருளிது என்ற
வள்ளுவன்!"

என்கிறது அது. அதே நூல்,

"மாறுகொண் டறையு மதிநூல் கடல்கிளர்
சமயக் கணக்கர் தம் திறம் கடந்து"

நிற்பது என்றும் கூறுகின்றது. இஃதெண்ணத்தக்கது.

2. திருவள்ளுவர் கண்ட சமய நடுநிலை

இறைமைக் கொள்கை: தலைமையும் இயக்கமும்

திருக்குறளில் இறைவன் என ஆளப்பட்டது ஒருவகை நூன்முறை வாய்பாட்டாலேயேயாம். செல்வம், வளமை, அழகு, பொலிவு என்பவற்றைத், 'திரு' 'செய்யாள்' என்றும், மூடிச் சோர்ந்து கிடத்தலை 'முகடி', 'தெளவை' என்றும் உடலின்று உயிர் பிரிதலைக் 'கூற்று' என்றும் இன்னவாறு வழங்குவது போல், தலைமை (முதன்மை)த் தன்மையை இறை, இறைவன் என்றார் திருவள்ளுவர்.

> *"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு*
> *இறையென்று வைக்கப் படும்"* (388)

என்றும், இறைகாக்கும், இறைகடியன், இறைவன் செறினும் என்றும் வருவனவற்றை நோக்க அவற் றுக்குத் தலைமை (முதன்மை)ப் பொருள் இருத்தல் வெளிப்படை. மற்றும் இறை என்பதற்குத் தங்கி யிருத் தல் என்னும் பொருள் பண்டே உண்டு. "இறை கூர்ந்த பேன்" என்பது புறநானூறு. ஆதலால் இறைவன் என்பான் எங்கும் இருப்பவன் என்னும் பொருளதாம்.

முத்தொழிற் கொள்கை

உலகைப் படைத்துக் காப்பவன் இறைவன் என்னும் கருத்து புறநானூற்றிலே இடம் பெற்றுள்ளது.

"ஓரில் நெய்தல் கறங்க; ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார் புரைப்பப்
***படைத்தோன்** மன்றவப் பண்பி லாளன்"!*

என்பது அது.

*"ஐதேகு அம்மஇவ் **வுலகுபடைத் தோனே**"*

என்னும் நற்றிணைக் காட்சியும் அதனைச் சுட்டும்.

உலக நலப்பேற்றை உலகு படைத்தோனுடன் கற்பியாமல்,

"உண்டால் அம்மஇவ் வுலகம்.....
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

எனப் பார்த்த புறநானூற்றுப் பார்வையாளரும் பண்டே காணப்படுகின்றார். வள்ளுவப் பார்வையும் இவ் வழிப்பட்டுச் செல்வது என்பதைப்,

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்" (996)

என்னும் குறள் தெளிவிக்கும்.

'படைத்தல் காத்தல் அழித்தலாகிய முத்தொழிற் பாட்டை வள்ளுவ நோக்கு இறையோடு இயைத்த தில்லை' என்னும், அடிப்படையை நோக்குதல் வேண் டும். இவ்விடத்தே ஓரையம் கிளரும். அவ்வையமும் உரையாசிரியர்கள் செய்த உரை வேற்றுமையால் கற்பார்க்கு ஏற்படுவதாம். அது, 'உலகியற்றியான்' என வரும் சொல்லாட்சி ஆகும்.

இயற்றுதல் - படைத்தலா?

இறைவனைச் சுட்டும் கடவுள் வாழ்த்துப் பகுதியில் 'உலகு இயற்றியான்' என்னும் பெயராட்சி

இல்லை என்பது அப்பொருளை விலக்கிவிட உதவுகின்றது. 'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த, வகுத்தலும் வல்ல தரசு" என்பது அரசொடும் இயற்றியானை இணைத்துக் கொள்ள உதவுகின்றது. இனிச் சொன்மரபும் பின்னதையே சார்ந்து உறுதி செய்கின்றது.

'இயற்றுதல்' என்பது உலகு படைத்தலைக் குறிக்குமா? இயற்றுதல் படைத்தல் பொருளில் வேறு எங்கே இடம் பெற்றுள்ளது? உளதாக்கல், உண்டாக்கல், படைத்தல் என்பனவே உலகொடும் தொடரும் மரபாட்சிகள். நூல் இயற்றுதல் சட்டம் இயற்றுதல் என்பதே வினைமரபு ஆகலின், படைத்தான் மேல் ஏற்றப்பட்ட பழியென மரபிலா உரைவரைந்து பறையறையாமல், ஆட்சியாளனொடு சார்த்தி அறங்கூறுதலே வள்ளுவ நோக்காம்.

*"கொடையளி செங்கோல் **குடியோம்பல்** நான்கும்*
உடையானாம் வேந்தர்க் கொளி"

என்பதிலுள்ள 'குடியோம்பல்' இறைமாட்சி நிறை நிலையாதல் தெளிக. (390) இவ்விறை, ஆள்பவன் அல்லனோ?

"என்னிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியனெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக"

என்னும் வஞ்சினப்பாட்டு ஆள்வோன் ஒருவன் தன் ஆள் கடனாகச் சுட்டிய பாட்டேயன்றோ!

இவற்றால் முத்திருமேனிக் கொள்கையும், முத்தொழிற் கொள்கையும் வள்ளுவம் சாராதவை என்பதும் தெளிவாகும். இனி, வகுத்தான் வகுத்த வகை

என்பதும், வேந்தனையே சார்தல் 'இயற்றலும்' என்னும் குறள் வழியே வரும் 'வகுத்தலும்' என்பது தெளிவாக்குவதாம்.

இறை நிலைகளுள் குருவன் நிலை

திருக்குறளுக்கு உரைகாணத் தொடங்கும் திரு.வி.க. "ஏட்டினின்றும் இயற்கையிடமும், அதன் உள்ளுறையான இறையினிடமும் செல்லுதல் வேண்டும். இஃதொருவித ஒழுங்கு முறை" என்கிறார். (பக்.10)

"மனமுடைய மக்கள் - வாக்குடைய மக்கள் - எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஒன்றை எப்படி நினைத்தல் கூடும்? எப்படி வாழ்த்தல் கூடும்? என வினாவி, இயற்கையில் இறை நீக்கமறக் கலந்துள்ள நுட்பம் இயற்கை வழிபாட்டாலேயே சிலர்க்கு இயல் பாக விளங்கும். பலர்க்கு அஃது அவ்வழிபாட்டால் விளங்குவதில்லை. இப்பலர்க்குக் குருநாதன் அருள் தேவை. கடவுள் குருநாதன் உள்ளத்தையும் கோயி லாகக் கொண்டு உயிர்கட்கு அருள் செய்தலால் **கடவுள் நிலைகளுள் குருநாதன் நிலையும்** ஒன் றாகும்" என்கிறார். (பக். 24)

மேலும்,, "ஆதிபகவன் '**ஞானகுரு**, என்னும் பொருளில் நிற்கும் போது, அவனது குருநிலை விளங் குவதாகிறது. இது வழிபாட்டுக்கு எளியது" (பக். 41), குருநாதன் வாயிலாகக் கடவுள் அறிவுறுத்திய ஒழுக்க நெறியில் நின்றவர் நீண்டகாலம் வாழ்வர். (பக். 60)

ஐந்தவித்தான் எவன்? இறைவன் என்று சிலர் கூறுப. இறைவனுக்கு ஐந்து (புலன்) உண்டா?

புலனே இல்லா ஒருவனைப் புலனை அவித்தவன் என்று எப்படிச் சொல்வது?

ஐந்தவித்தானை எல்லாங்கடந்த இறைவன் என்று சொல்லுதல் பொருந்தாது.

ஐந்தில் இருந்து ஐந்தவித்தவன் குருநாதன். குருநாதன் உடலைக் கோயில் கொண்டு கடனாற்று வதும் கடவுள் நிலைகளுள் ஒன்றாதலான் ஆசிரியர் ஐந்தவித்தானைக் (குருநாதனை) கடவுள் வாழ்த்தில் வைத்து ஓதினார் என்க.

குருநாதன் மனிதனா? ஆண்டவனா? குருநாதன் மனிதக் கோலம் உடையவன். அவன் அகத்தில் வீற் றிருப்பவன் ஆண்டவன், குருநாதன் தனக்கென ஒன்றில் லாதவன். கடவுளே விளங்கும் உள்ளமுடையவன். கடவுள் இயக்க இயங்குவோன். மனமிலாக் கடவுள், குருநாதன் வழி நினைப்பவனாகிறான்; மொழியில்லாக் கடவுள், குருநாதன் வழிப் பேசுவோனாகிறான்; மெய்யிலாக் கடவுள், குருநாதன் வழிச் செயல் புரிவோனாகிறான். (பக். 64)

"தமிழ் உலகில் நுழைந்த கதை நூல்கள் பலவும்-போலித் துறவுகள் பலவும்-நாட்டின் **அகக் கண்ணைத் தூர்த்து விட்டன. அதனால் புறக்கண்ணொளியும் மழுங்க லாயிற்று**" (பக். 133) என்று கூறுவனவற்றை இவண் நோக்குதல் ஆய்வுத் துணையாம்.

தாள்சேர்தல் - பொருள்

இறைவணக்கப் பாடல்கள் பத்தனுள் தாள் சேர்தல், தாள் தொழல், தாளை வணங்குதல், அடி சேர் தல் எனத் தாளும் அடியுமாய் ஏழு இடங்களில் ஆள் கிறார். ஆதலால் உருவ வணக்கத்தை உளங்கொண்டு சொல்கிறாரோ என எண்ண வேண்டுவதில்லை. தாள் சேர்தல் முதலியவை தாளை அடைதல், பற்றிக் கிடத்

தல், மன்றாடுதல் என்னும் பொருள் படுவன அல்ல என்பாராய்த் திருவள்ளுவரே, 'பொருள் சேர் புகழ் புரிதல்' என்றும், 'பொய்தீர் ஒழுக்க நெறி நிற்றல்' என்றும் கூறுகிறார். ஒழுகிக் காட்டினார் அல்லது ஒழுகிக் காட்டுவார் ஒருவரைக் கண்டன்றே அவர்தம் ஒழுக்க நெறியைப் பற்றி நிற்றல் கூடும், பொருள் சேர் புகழ் புரிந்து நடாத்தலும் கூடும்! ஆதலால் வழிகாட்டியாய் நிற்கும் குருவன் ஒருவனே இறைவன் என வள்ளுவர் கொள்கிறார் என்பது விளங்கும். இதற்கும் அகர முதல எழுத்தெல்லாம் என்னும் தொடக்கமே சீரிய சான்றாம்.

முதலதிகாரப் பொருண்மை

அகரமும் எழுத்தே; ஆகாரமும் பிறவும் எழுத்தே; அகர எழுத்திற்கும் மற்றை எழுத்துகளுக்கும் உள்ள வேற்றுமை என்னை எனின், அகரம் தலைமை அல்லது முதன்மை உடையது. மற்றை எழுத்துகளின் இயக்கத்தில் கலந்து நிற்பது என்பனவே. இதுபோல் இங்குக் காட்டப்படும் 'ஆதி பகவன்' உலகுக்கு முதலும் இயக்கமும் ஆபவன் என்பதே.

முதல் என்பதற்கும் முதன்மை, முதலாகிய பொருள், முதலாம் எண், மூலம், கிழங்கு, வித்து, வேர், அடிப்படை இன்னபொருள்கள் விரிந்துள்ள அமைதி இறையின் விரிநிலை விளக்கம். அடுத்த குறளில் "கல்வி யறிவால் உண்டாகும் பயன் வாலறிவன் இவனென ஒருவனைக் கண்டு அவன் வழியில் சார்ந்துநிற்றல் என்று குறிப்பிடுகிறார்.

அவன் நூலறிவன் அல்லன், "நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும் தன் உண்மை அறிவே மிகும்" என்பது

போன்ற நுண்ணறிவும் உண்மையறிவும் மட்டும் உடையானும் அல்லன். மனத்துக்கண் மாசு நீங்கிய குரு மணியன்! அவனே வாலறிவன். நிலையாமை அறிந்து, நிலைப்புத் துறவறிந்து, பொய்யுணர்வு அகன்ற மெய் யுணர்வாளன்; தவா அப் பிறப்பீனும் அவாவறுத்து, ஊழையும் உப்பக்கம் காணவல்ல உரவோன்! அவனைச் சார்ந்து நின்று அவன் வழியைப் பற்றிக் கொள்ளாக் கால் கற்றவன் கற்றவன் ஆகான்.

வாலறிவன் வன்பு, துன்பு, சூழ்ச்சி, தாழ்ச்சிக்களங் களில் அமைவான் அல்லன். அவன் மாசற்ற மலரிடத் தான்; ஆம்! அவன் மாசற்ற மணமலர் இடத்தான்; அம் மலர்மேல் இருந்து இயக்கவல்லான். அம் மெல்லியல் நல்லோன் இருந்து இயக்கப் படுவோன் நெடிது வாழ்வான்.

'உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும் பெற்றியனை'

பேணிக் கொண்டபின்னை மலைவு ஏது? மயக்கம் ஏது?

விருப்பு என்பது தன்னல நாட்டம்; வெறுப்பு என்பது தன்னல நாட்டம் நிறை வேறாக்கால் உண்டாகும் வெதுப்பு; இரண்டுமே ஒருவழிப்பட்ட இரட்டை முரண்கள். தன்னல நாட்ட மில்லானுக்கு விருப்பு உண்டோ? வெறுப்பு உண்டோ? இல்லை!

விருப்பு வெறுப்பு இலாத நெஞ்சம் தூயநெஞ்சம், அந்நெஞ்சில் தீயது இருக்க இடமில்லை! ஒளி புகுந்த அளவில் இருள் அகல்வது போல இருள் சேர் இரு வினையும் பொருள்சேர் புகழ்புரிவாரிடத்துத் தாமே அகன்று விடுகின்றன. மயங்குதல் கழன்றுவிட்ட இடத்தில், மயக்குதலுக்கு இடம் இல்லையே!

மனமாசின்மை பொறிவாய்கள் ஐந்தையும் கட்டுக்குள் வைக்கின்றது. பொறிகள் ஐந்தும் ஒழுங் குற்றுப் பக்குவப்பட்டுப் பழகிப்/பழகித் தழும்பேறி விடுகின்றன. அதனால், பொய்யுணர்வற்று, மெய்யுணர் வுற்றுச் சிறக்கின்றன. செய்யும் செயல்கள் அனைத்தும் செம்பொருட் செயல்களாகி விடுகின்றன. வாழும் போது வழிகாட்டியாகச் சிறந்த வாழ்வு, மறைவின் பின்னரும் நினைவார்க்கு வழி காட்டியாய் இறவாப் புகழில் நிலைக்கின்றது!

விருப்பு வெறுப்பு இல்லை. மயக்கும் இருண்மை இல்லை. பொறிகளின் குறும்புகள் இல்லை; ஒப்பில்லா ஒருநிலை ஒன்றிய நெஞ்சில் மனக்கவலைக்கு இட மேது? அத்தன்மை அடையார்க்கு மனக்கவலையை மாற்றிக் கொள்ள வகைதான் ஏது?

மனத்துக்கண் மாசின்மையாம் அறத்தில் நிலை பெற்று அருளாளியாகத் திகழ்பவன் அறவாழி அந்தணன். அவன் நேர்ந்தும் நிறைந்தும் சேர்ந்தும் செறிந்தும் உறையும் இடமாகத் தன்னைத் தந்து விட்டவனுக்குப் பாவக்கடலில் வீழும் நிலை உண்டா? அஃதுண்டானால் அன்றோ அதனை நீந்திக் கடக்க வேண்டும் இடர் உண்டு! பாவக் கடலின் பாங்கரும் செல்லா அறவாழி அந்தண வாழ்வனுக்கு அக்கடலை நீந்திக் கடக்கும் இடர் எப்படி உண்டாகும்?

ஓடாப் பொறியால் ஒருபயன் உண்டா? இயற்கை யாம் உடற் பொறியாயின் என்ன! செயற்கையாம் பொறியாயின் என்ன! அவற்றின் முறையான இயக்கமே பயன்பாடாம்! இயங்காமை அழிபாடாம்!

"கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி" (418)

“குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினள்
என்ன பயத்தவோ கண்” (705)

“உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்” (406)

“உளரெனினும் இல்லாரோ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்” (730)

“ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்” (214)

“செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்” (420)

“கோள்இல் பொறியில் குணம்இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை (9)

எனச் செயலற்ற பொறிகள் பொறிகளாகா வென்றும், செயலற்ற வாழ்வு வாழ்வாகாது என்றும் வள்ளுவர் பயில வழங்குதல் நோக்கத்தக்கன.

தேர்ந்த குணங்களின் பிழம்பாக அமைந்தான் ஒருவன். அக்குணம் பலர்க்கும் பயன்பட வாழாமல் செயலற நிற்பன் எனின், அக்குணங்களை அவன் கொண்டமைக்கு என்னதான் சான்று? இறைமைச் சிறப்பாய் அமைந்தவன் அவ்வழியில் இயங்காதிரான். இருப்பின் அவன் பொறியின்மையாளனினும் புன்மை யாளனாவன். என்னெனின்,

“பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி” (618)

என்பது வள்ளுவமாகலின்.

இனிப் பிறவி என்பது என்ன என வினவி இடருற வேண்டா என்பார்போல் “பிறப்பென்னும் பேதைமை” என்றார் பேதைமை நீங்கப் பிறப்பறும்; ‘அதுவே

அறிதோறும் அறியாமை கண்டு' முழுதுணரும் அறிவுப் பிறப்பாகும். அதனைக் குறித்தே "சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு" என்றார்.

பிறப்பறுக்கும் பெற்றி

வாலறிவன் சார்பும் இருள் நீக்கமும் அறவாழி அந்தண்மையும் அவாவறுத்தலும் உடையானுக்குப் பிறப்பென்னும் பேதைமை ஒன்றுதல் உண்டோ? இல்லை என்பாராய்ப்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவனடி சேரா தார்" (10)

என்றார்.

திருவள்ளுவர் கண்ட துறவுநிலை

துறவறம் - தனியறமா?

சமயப் பண்படுத்தப் பயிற்சிச் சாலையாவதும், சமயப் பயிர் விளைவின் நாற்றங்கால் ஆவதும் இல் வாழ்வே என்பது வள்ளுவம். அது தமிழ் மண்ணுக்கு அமைந்த தொன்னெறியாம்.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்பது அது. அதனால், 'அறத்தான் வருவதே இன்பம்' என்றும் 'அறனெனப்பட்டதே இல் வாழ்க்கை' என்றும், துறந்தார்க்கும் இல் வாழ்வானே துணை என்றும் பலபடக் கூறினார் வள்ளுவர். இல்லறம் பேணி வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத் துள் வைக்கப்படுவான் என்பது வள்ளுவத் தெளிவே.

அமிழ்து காண்திறன் இல்லறம்

"தேவர்க்குரியது அமிழ்து என்றும், பாற்கட லிடைக் கடைந்து அடைந்தது என்றும், அதனை உண்டார் இறவார் என்றும், அந்நாளில் பிறர் கூறவும், இங்குளார் ஏற்கவுமாக இருக்க, வள்ளுவர் அதனை 'இயல்பினால் வாழும் இல் வாழ்விலேயே' காணற்குரிய தாகக் காட்டினார்.

அமிழ்தால் செய்யப்பட்ட அருமைப்பிழம்பு இல்லாள் என்றும், அவள் தந்த அமிழ்த உயிரி குழந்தை என்றும், அக்குழந்தையின் மெய்யும், அது கூறும் மழலையும், அது பிசையும் கூழும் அமிழ்து, அமிழ்து, அமிழ்து என்றும் உயிர் தளிர்க்க வைக்கும் உயர் வுடையவை இவை என்றும் காட்டிய அருமை பெரும் புரட்சியேயாம்! வானின்றுலகம் வழங்கி வருதலால் மழை அமிழ்த மாதலைக் குறிக்கும் அவர்தம், நோக்கு எத்தகைய மேன்மையது! பாலமுத மூலம் நீரமுதே யன்றோ! மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இன்பந் தரும் 'தம்மில் தம் மக்கள் அறிவுடைமை'யை அவாவி நிற்கும் அருமைப் பாடுடையது வள்ளுவ இல்லறம். பிறர்க்குத் தம் எலும்பாலும் உதவும் அன்புடைமை இல்லில் அரும்ப, விருந்தோம்பி, இனியவைகூறி, செய்ந் நன்றியறிந்து, செப்பமும், அடக்கமும், ஒழுக்கமும், பொறுமையும், ஒப்புரவும், ஈகையும் போற்றிப், புகழென்னும் மேனிலை மாட வைப்பகமாக இல் வாழ்வைக் காண்பதும், காட்டுவதும் வள்ளுவம்.

துறவறம் அன்று துறவு நிலையே

இல்லறத்துப் பயிற்சி முதிர்வால், அல்லவை கடிந்து, தவமும், வாய்மையும், துறவும், மெய்யுணர்வும்

வாய்க்கப், பேரா இயற்கைப் பெருநிலை பிறங்கி நிற்கும். ஆதலால், குடிநலம் பேணும் இல்வாழ்வு வழியே, உலகநலம் பேணும் துறவு போற்றல் வள்ளுவர் கண்ட ஒருமைச் சமயப் புரட்சி என்க! நான்கென வாழ் வியல் அறத்தைப் பகுப்பார் பகுக்க, அவற்றைச் சுருக்கி, இல்லறம், துறவறம், என இரண்டாய்த் தொகுப்பார் தொகுக்க, அவற்றை ஒருமை வாழ்வின் வளர்நிலை யாய்க் கண்ட பெருந்தக்கார் திருவள்ளுவர் ஆவர். அதனால், அவர் இல்லறம் எனப் பல்கால் உரைத்தாரே அன்றி, ஓரிடத்தும் 'துறவறம்' எனச் சொன்னார் அல்லர்! இல்லற வளர்நிலைப் படியாம் ஒன்றைத் தனியறமாக்கி எண்ணலும் அவர்க்கு உடன் பாடன்று என்பதால் அவர் தம் இயல்பொடு கூடிய அறநெஞ்சம் விளங்கும். மற்றுத் துறவறவியல் என்னும் பெயரீடு உண்டே எனின் அது தெய்வப் புலவர் **நெஞ்சொடு வாய்த்த பெயரன்று** என்பதே வெளியாம்.

மண்ணில் விண்

மண்ணுலகிலேயே விண்ணுலகைக் கண்டடைய வைத்தவர் திருவள்ளுவர். விண்ணவர்க்குரியதாகக் கருதப்பட்ட அமிழ்தை மண்ணவர் வாழ்வியல் பொரு ளாகக் காட்டியதை அறிந்துள்ளோம். அவ்வாறே வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனைத் தெய்வத்துள் சுட்டியதையும் அறிந்துள்ளோம். மேலும் ஐயப்படாது அகத்தது உணர்வானையும் (702) தெய்வத்தோடு ஒப்புக் கொள்வர் அவர். குடி செய்வல் என்னும் முயற்சியாளனுக்குத் தெய்வம் மடிதற்று முந்துற நின்று உதவுதலையும் (1023) குறிப்பார். நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப் புத்தேள் உலகு போற்றாது (234);

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே ஒப்புரவின் நல்ல பிற" (213) யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த உலகம் புகும்" (346) இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள் அமையார் தோளஞ்சு பவர் (906) என்று விண்ணவர் வாழ்வினும் மண்ணவர் வாழ்வைச் சிறப்பிப்பார். ஈதல் இசைபட வாழ்தல் ஆகியவை ஊதியம் என்னும் அவர் (231) மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்றென ஈகைச் சிறப்பை எடுத்தியம்புவார் (222). இவற்றால் மண்ணுலகிலேயே விண்ணுலகைக் காண விழைந்த வள்ளுவச் சமயப் புரட்சி இனிது விளங்கும்.

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து" (353)

என்னும் அவர் வாய் மொழி காண்க.

இனித், **தெய்வம்** என்பது 'இறை' அன்று. மனிதர் தாம் அடையும் அழியா **அமரநிலை**. மாந்தர் பெற வேண்டும் நிறைபேறு தெய்வநிலை. அஃது இறை நிலையன்று என்பது முதலதிகாரத்தில் சொல்லப்படும் இறைவன் பெயர்களுள் 'தெய்வம்' எனச் சுட்டாமை கொண்டு உணர்க. சங்க நாளில் தெய்வம் 'துறவர்' என்றமையும் வீரர் அமரர் என்றமையும் அறிக.

உயிரியல் கொள்கை

வள்ளுவரின் உயிரியல் கொள்கை தனிச்சிறப் பினது. உடல் வேறு உயிர் வேறு என்பதைப் பகுத்துக் காணும் அவர் உடலைப் பழித்தார் அல்லர்; உடலைக் காதலியாகவும் உயிரைக் காதலனாகவும் கண்டது அவர் தம் கவின் பார்வை.

"உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு" (1122)

என்பது அது. காதலிமேல் காதலன் கொள்ளும் நேய மொப்ப, உடல் மேல் நேயம் கொண்டு போற்றுதல் வேண்டும் என்பது அவர் குறிப்பாதல் வெளிப்படை. இக் குறிப்பினதே,

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்" (1039)

என்பதும்.

உடலுக்கு ஓர் அருமையான பெயரைத் திருவள்ளுவர் சூட்டுகிறார். அது '**உயிர் நிலை**' என்பது. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை (290) என்னும் குறளில் இப்பொருளமைதி இடம் பெற்றது. 'அன்பின் வழியது உயிர் நிலை.' (80) அன்பியக்கமே உயிரியக்கம் எனக் காட்டியது. கொல்லாமையும் ஊனுண்ணாமையும் போற்றலால் உயிரியக்கம் காட்டுவது. 'உண்ணாமை உள்ளது உயிர் நிலை' என்பது (255) உயிர் தளிர்க்க வழிகாட்டிய அவர் (1106) உடம்பு நெடிதுய்க்கும் வகையையும் உரைத்தார். அது,

"அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு" (943)

என்பது. உயிர்க்கு ஊதியமாவது இது என்பதைக் குறிப்பாராய்,

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு" (231)

என்றார்.

உயிர் என்றும் உடலகத்தில் உறைவதன்றென்றும், அத்தொடர்பும் ஆயத்தக்கதே என்றும் அறிவிப்பாராய்,

புக்கில் அமைந்தின்று கொல்லோ? உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு (340)

என்றும்

மற்றும் தொடர்ப்பா(டு) எவன்கொல் பிறப் பறுக்கல்
உற்றார்க் குடம்பும் மிகை. (345)

என்றும் கூறினார்.

உடலினின்றும் உயிர்பிரிதல் இயற்கை என்றும், அப் பிரிவைப் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டுவ தில்லை யென்றும் தெளிந்து உரைப்பாராய்.

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு" (358)

"உறங்குவது போலும் சாக்கா(டு); உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு " (339)

என்றார்.

இந்த இரண்டு உவமைகளையும் அறிந்த அள வானே, தெய்வப் புலவர் நெஞ்சம் எத்தகைத் தெளிவும் தேற்றமும் உடைய தென்பது விளக்கமாம்.

கொடியில் இருந்து உதிரும் பூவைப் போல் உடலில் இருந்து உயிர் பிரிய வேண்டும் என்னும் தாகூரின் உவமை இவண் எண்ணத்தக்கது.

அன்னை மடியிலே தலைசாய்தலாக இறப்பைக் கருதுதல் இயற்கை இறைமை வழிப்பட்டதே அல்லவோ! மறதி, மறைப்பு, உறக்கம், இறப்பு என்னும் நான்கும் இயற்கை இறைமைக் கொடைகள் எனக் கொண்ட வள்ளுவப் பார்வை எண்ண எண்ண இன்பம் சேர்ப்பவையாம்.

3. திருவள்ளுவர் காட்டும் நிலையாமை

நிலையாமைக் கொள்கை

உடல் இனிது போற்றத் தக்கதே; உயிர் இன்பால் தளிர்க்கச் செய்யத் தக்கதே; எனினும் இவை என்றும் நிலையாய் அமைபவை எனக் கொள்ளல் வேண்டா என்பாராய்,

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு" (336)

என்று திருவள்ளுவர் அறிவுறுத்தினார். 'வாழப்போகி றோம்' 'வாழப்போகிறோம்' என்று சொல்லிக் கொண்டே வாழாது ஒழிவார்க்கு இரங்கி,

"ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல" (337)

என்றார். எதனால் இந்நிலை என்பாராய்,

"நில்லாத வற்றை நிலையின என்றுணரும் புல்லறிவு உண்மையால்" என்கிறார். இதன் பயன் நிலையாமையை உணர்ந்து கொண்டான் ஒருவன், நாள் என்பது வாழ்வையறுக்கும் வாள் என்பதை உணர்ந்து கொண்டான் ஒருவன், கூத்தாட்டு அவைக் குழாத்துக்கு வந்து போம் மாந்தர் எனப் போம் செல்வம் என உணர்ந்து கொண்டான் ஒருவன், என்ன செய்தல் வேண்டும்? புலம்பி அழுவதா? புடைத்துக்கொண்டு புலம்புவதா? இல்லை; நிலைக்கத்தக்கவை எவை

என்பதை உணர்ந்து அவற்றைச் செய்தல் வேண்டும் என்பதே. இதனை,

> *"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்*
> *அற்குப ஆங்கே செயல்"* (333)

என்பதால் தெளிவுறுத்தினார். செல்வம் என்பது பொருட் செல்வம் மட்டுமோ? உடற்செல்வம் செல்வமன்றா? காலச்செல்வம் செல்வமன்றா? கல்விச் செல்வம் செல்வமன்றா?

அற்குப செய்தலையும் நாளை என்னாதே; உடனே செய்; என்னெனில் நாச்செற்று விக்குள்மேல் வருதல் எப்பொழுது என அறியோம்; ஆகலின், உடனே செய்க என்கிறார். வள்ளுவர் கூறும் நிலை யாமை, நிலைபெறுவன செய்யத் தூண்டும் தூண்டற் பொருளதாம்.

துறவின் எளிமையும் நயனும்

நிலையாமை உணர்ந்த நிலையில் உண்டாவது துறவு. துறவு நோக்கினால் உணரப்பட்டது நிலை யாமை. ஆகலின் இரண்டும் ஒன்றையொன்று தழுவி யவை.

வள்ளுவத் துறவு பால் கருதியதன்று; காலம் கருதியதன்று; கோலமும் கருதியதன்று; அகமாம் நெஞ்சம் கருதியது. 'எதனை வேண்டா என விடுகி றோமோ, அதனால் துன்பம் இல்லை' எவ்வளவு எளிய வழி; எத்தகைய அரிய கண்டுபிடிப்பு! மனக்கவலை மாற்றும் மருந்தா இது? இல்லை; மனக்கவலை அரும்பு தற்கும் இடந்தராத மருந்து இது! புகை பிடியானுக்கு அக்கவலை உண்டா? பொடி விட்டானுக்கு அக்கவலை உண்டா? சிறுகுடி பெருங்குடி கருதானுக்கு அக்கவலை

உண்டா? துறவு என்பது கவலையூட்டும் எவையும் கருதாமையே எனின் எவ்வளவு எளியது!

விடவேண்டியவற்றை ஒவ்வொன்றாய் விடுவதா? ஒருங்கே விடுவதா? ஒவ்வொன்றாய் விடல் வெற்றி யாகாது; ஒருங்கே விட வேண்டும்; விடவேண்டிய வற்றை எல்லாம் ஒருங்கே விடவேண்டும் என்கிறார். விடவேண்டும் என்று துணிந்தபின், அரையென்ன குறையென்ன?

வேண்டாப் பொருளை விட்டால் மட்டும் போதுமா? வேண்டா உணர்வையும் விடுதல் வேண் டும்; வேண்டா உணர்வுகளுள் தலையாயன இரண்டு. அவை 'யான்' 'எனது' என்பன! இவற்றை விடான், எவற்றை விட்டவனும் ஆகான் என்கிறார்.

முற்றாகப் பற்றை ஒழித்தால் போதுமா? போதாது; தன்னைப் பார்க்கிலும் முற்றாகப் பற்று விடுத்தவன் - தனக்கு வழிகாட்டியாகத் தன் மனத்துக் கொண்ட மேன்மையோன் ஆகிய பற்றற்றான் ஒருவன் பற்றினைப் பற்றி முற்றாக அவன் வழியிலேயே நிற்றல் வேண்டும் என்கிறார்.

சிக்கலை உரைத்து, சிக்கலின் தீர்வையும் உரைத்து, அச்சிக்கல் மீள வாராமைக் காப்பும் உரைத்து அரவணைக்கிறார் திருவள்ளுவர்.

பேரா இயற்கை

மெய்த்துறவாளி எவன்? அவன் மெய்யுணர் வாளன்! மெய்யுணர்வாளன் மருள் நீங்கி மாசறு காட்சியவன்; ஐயத்தின் நீங்கித் தெளிந்தவன்; மெய்ப் பொருள் காண்பவன்; உள்ளது உணர்பவன்; செம் பொருள் காண்பவன்; சார்புணர்ந்து சார்பு கெட

ஒழுகுபவன்; அவனைக் காமமும் வெகுளியும் மயக்க மும் நெருங்கா! ஆகலின் அவனுக்குப் பேதைமைப் பிறப்பு இல்லை; சார்தரு நோய் இல்லை!

'வேண்டும் அது' 'வேண்டும் இது' என்னும் செல்வ வேட்கையில் இருந்த முந்தை நிலை மாறி, 'வேண்டாமையே விழுச்செல்வம்' எனக் கொண்ட மெய்யுணர்வாளிக்கு வேறென்ன வேண்டும்? கட்டில் அடங்கா ஆசையையே கைகழுவி விட்டவனுக்கு, என்ன கட்டுண்டு? கவலை உண்டு? அவன் அடை கின்ற பெருநிலையே "பேரா இயற்கை!"

பேரா இயற்கைப் பெருநிலை எவர் அருள்வது? ஒருவர் கொடுக்க ஒருவர் பெறுவதா? இல்லை! அது தானே அமைவது! தன்னால் தன்னிடத்துத்தானே அமைத்துக் கொள்வது! அதற்குக் காலம், களம், கருதிப்பார்த்தல் என்பன இல்லை! அது,

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்" (370)

என்பது. வள்ளுவர் கண்ட இச்சமயப்புரட்சி எத்தகு இயற்கையானது! முறைமையானது! அப்புரட்சி தழைப்பதாக! உலகப் பொருளாய் ஓங்குவதாக!

"வள்ளுவர்க்கு நிறமில்லை மதமும் இல்லை
மதங்கட்கப் பாலிருந்தே குறள் செய்துள்ளார்
உள்ளசிறு மதங்குறிக்கும் சொற்கள் கொண்டே
உவகையொடு தத்தமது மதத்தில் சேர்த்துத்
தெள்ளிவைத்த நீறிடுதல் திருமண் சார்த்தல்
செழும்பிண்டி அமர்ந்தானைச் சேர்ந்தான் என்னல்
தள்ளிவைத்த மரபென்று பேசல் யாவும்
சரியென்று தோன்றவில்லை என்க ருத்தில்"

என்னும் பாவேந்தர் முடிபே முடிபாக மேலே செல் வோம்.

ஊழ் என்பது வினையா?

அறத்துப்பால் நிறைவில் உள்ளது ஊழ்; அது பொருட்பால் முகப்பாகவும் அமைந்தது.

ஊழ், பால், உண்மை என்னும் முச்சொல்லாட்சி யும் அவ்வதிகாரத்தில் இடம் பெற்றுள. இவற்றொடும் முறை, தெய்வம், நியதி, விதி என்பனவற்றையும் ஒரு பொருட் கிளவியாகக் குறிப்பார் **பரிமேலழகர்**.

ஊழ் என்பது வினைப்பயன் என்னும் கருத்து பிழை வழக்கு, அவ் வழக்கு வழிப்பட்டதே விதி என்பது.

"பலவின் பழ மூழ்க்கும்" (புறம். 109)

"ஊழுறு தீங்கனி யுதிர்ப்ப" (குறுந். 278)

"தாழை ஊழுறு கொழு முகை" (குறுந். 228)

"பாதிரி ஊழ்முகை" (புறம். 399)

"ஊழ்முகை அவிழ" (நற். 115)

பண்புடை ஊழிற்றாக நின் செய்கை. (புறம். 29)

இன்னவாறு ஊழ்த்தலும், ஊழும், ஊழிற்றும் 96 இடங்களில் பழ நூலாட்சியில் இடம் பெற்றுள. ஆங்கு முறைமை, ஒழுங்கு, முதிர்ச்சி என்னும் பொருளிலேயே வந்துள. ஒருவன் செய்வினைப் பயனென வருவன அல்ல. விதி, வினை என்பனவும் அல்ல.

முகை திரளல், காய் கனியாதல், கனி உதிர்தல் என்பன இயற்கையாம் ஓர் ஒழுங்கு முறையே! அல்லது இயற்கையே! 'ஊழி' என்பது எவராக்கினார்? எவருக் கென எண்ணி ஆக்கப்பட்டது! 'ஊழல்' என்பது முறை கேட்டுப் பொருள் தருதல் இற்றை வழக்கில் பெரு வரவாயிற்றே!

வள்ளுவர் ஊழ் என்பதை எப்பொருளில் ஆண்டார்? 'உலகத்து இயற்கை' என்னும் பொருளில் ஆண்டார். 'இருவேறு உலகத்து இயற்கை' என்பது அது (374). அவ்வீரியற்கை ஒன்றற்கு ஒன்று எதிரிடைப் பட்டவை. அவை ஆகூழ் போகூழ் என்றும், ஆகலூழ் இழவூழ் என்றும், பால் பால்அல்ல என்றும், நன்று, அன்று என்றும் இரட்டை இரட்டையாய் எண்ணப் படுகின்றன! என்னதான் திறவோனாக இருப்பினும், என்னதான் துணிவோனாக இருப்பினும் அவன் உலகத்து இயற்கைக்கு ஆட்பட்டு விடக்கூடியவனே என்பதை வலியுறுத்தவே ஊழ் என்பதை வைத்தார். அவனை விஞ்சிய இயற்கையின் வெற்றியைக் கண்டு அவன் சோர்ந்து விட வேண்டுவதில்லை! அம் முறைமை பொதுமைப்பட்ட ஒன்றே என்று ஆறுதலும் அமைவும் தருவதே வள்ளுவர் வகுத்த ஊழ் ஆகும். அவனவன் செயலுக்குக் கிடைக்கும் நன்மையும் தீமையு மாம் வினைப் பயன் வேறு; ஊழ் வேறு; என்பதே அது.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை" (15)

என்பது ஊழ் தானே! ஒரு பொழுதில், பெய்து கேடு; ஒரு பொழுது, பெய்யாமல் கேடு; பெய்யும் போதிலும், பெய்யாப் போதிலும் எல்லார்க்கும் ஒத்த அளவால் கேடோ நலமோ இல்லை! ஒருவர்க்கே அவற்றால் நலமாம் பகுதியும் உண்டு; பொலமாம் பகுதியும் உண்டு! இதனால் தான்,

"நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்? (379)

என்றார்.

மாந்தன் அறிவியல் திறத்தால் இயற்கையை வெல்கிறானே! நீரில் நெருப்பைக் காண்கிறானே! காற்றைக் கட்டுக்குள் வைக்கிறானே! மழையைப் பொழிய வைக்கிறானே! இன்னன ஊழை வெல்லுதல் அல்லவோ? இல்லை! இவை,

”ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழாது ஞற்று பவர்” (620)

என்பதற்குச் சான்று! ஊழை வென்ற வெற்றியன்று!

தீயின் இயற்கை மேலே எழும்புதல்; நீரின் இயற்கை கீழே பாய்தல்; காற்றின் இயற்கை வெற்றிடம் நிரப்பல், இவை மாந்தன் செயல் ஒழிந்த காலைத் தன்னியற்கைவாய்ப்படுதல் அன்றோ காண்பது!

“செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
வெண்டிங்களுள் வெயில் வேண்டினும்
வேண்டியது விளைக்கும் ஆற்றலை”

என்ற திறம் தாமே இவை.

“தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்” (619)

என்பது போலக் கூலியாக வாய்த்து அவ்வளவில் அமைபவை என்க.

ஊழை வெல்லல் கூடும்! தத்தம் முயற்சியால் அயரா முயற்சியால்! ஆனால் அம் முயற்சி சோரும் போதெல்லாம் ஊழாம் உலகத்து இயற்கையே மாற்ற மின்றித் தன்னியல்பைக் கொள்ளும். அதுவே ‘ஊழிற் பெருவலி யாவுள?’ என்னும் வினாவுக்கு வாய்த்த விழுமிய விடை. வள்ளுவ விளக்கம் வான்சுடர் விளக்கம்.

4. நெறியமைந்த நெடுவாழ்வு - முத்தமிழ்க் காவலர்

"நெறிநின்றார் நீடு வாழ்வார்" என்பது நம்மறை. அதற்கு உயிர்ச் சான்றாக நின்று நிலைபெறக் காட்டி யவர் முத்தமிழ்க் காவலர்.

*தண்டேந்தும் பெருமூதாளராம் அகவையிலும், அதனை ஏந்தாமல் தொண்டேந்தி நின்றவர், நம் **அப்பரடிகள்**. அப்பரடிகள் அகவையினும் மீக் கூர்ந்து, இளமை வீறுடன் இயல்பவர் எத்துணையோ பேர்கள்!*

*இயல் செயல்களில் இருகடைக் கோடிகளாக (துருவங்களாக) இருப்பினும் வாழ்வுத் தொண்டாலும, அகவையினாலும் ஒன்று பட்டுத் தொண்ணூற்றைக் கடந்து வாழ்ந்த **தந்தை பெரியார், மூதறிஞர் இராசாசி** ஆகியவர்களின் அகவைத் தோழமையர் நம் முத்தமிழ்க் காவலர்.*

*உயர்நிலைப் பொறியரும், பெருநிலைத் தொண்டரும் 102 அகவை வாழ்வினரும் ஆகிய **விசுவேசுவரரை யும்** நாம் எண்ணுதல் நீடுவாழ்வுச் சான்றாம்.*

*"குறளை ஓதி, அதனை உணர்ந்து, அதனைக் கடைப்பிடித்து **அதுவாகவே ஆயினார் உயிர் தளிர்க்க வாழ்வர்**" என்பதைப் பறையறைந்து, பாருக்கு அறிவிக்கும் பேற்றாளர் முத்தமிழ்க் காவலர்.*

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை"

என்னும் அறத்தை ஏற்று,

"அறத்தான் வருவதே இன்பம்"

என்னும் இன்பந் துய்த்து,

"தம்பொருள் என்ப தம்மக்கள்"

என்னும் பொருள் நலப்பேறு எய்தி,

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம்"

என்னும் மெய்ப் பொருட் காட்சியராய்த் திகழ்பவர் முத்தமிழ்க் காவலர்.

"இவரைப் போல் வாழ்க" "அவரைப் போல் வாழ்க" என்று வாழ்த்தாமல் "**என்னைப் போலவும் என் துணையைப் போலவும் வாழ்க**" என்னும் துணிவும் வீறும் அமைந்து, புகழ் புரியும் இல்வாழ்வு; ஏறார்ந்த நடையர் முத்தமிழ்க் காலவர்.

காலம் தவறாமை, கடைப்பிடி தவறாமை, அறிவறிந்து ஆராய்ந்த தெளிவுடைமை, வினை செயல் வகைத் திறம், ஓய்வற்ற தொண்டு இன்னவை எல்லாம் ஒருங்குறையும் ஒள்ளியர் முத்தமிழ்க் காவலர்.

நாடு மொழி இனக் கேடுகள் எவ்வகையில், எவ் விடத்து, எந்நிலையில் உண்டாயினும் அவற்றைத் தம்மை ஈகம் செய்தும் தடுத்து நிறுத்தி ஆக்கம் பெறு விக்க முந்துறும் அரிமா முத்தமிழ்க் காவலர்.

உடையோம்பல், உடலோம்பல், உணர்வோம்பல், இயற்கை ஓம்பல், பொருளோம்பல் என்னும் ஓம்பல் களைக் கொண்டு, பொறிபுலப் பொருள் வாழ்வுக்

கேடுபயப்பனவற்றின் பக்கம் கூடப் பாராத் திட்பம், முத்தமிழ்க் காவலர் வாழ்வுடைமை:

பழந்தமிழ்ப் பாண்டியர் கண்ட பைந்தமிழ்ச் சங்கத்தின் நினைவினைப் போற்றுவார் போல், நாற்பத் தொன்பது புலவர்களை உறுப்பாண்மையராகக் கொண்ட **'புலவர் குழு'**வைத் தோற்றுவித்து நாற்பான் ஆண்டுகளுக்கு மேலாகப் புரவலராய்க் கட்டிக் காத்து வந்தவர் முத்தமிழ்க் காவலர்.

தமிழ் வளமாகத் திகழ்ந்து, புகழ்வடிவாய்த் திகழ்கின்ற **பாரதியார், பாவேந்தர், மறைமலையடிகளார், தமிழ்க் காசு, திரு. வி. க., நாவலர் ந. மு. வே., நாவலர் ச. சோ. பாரதியார், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார், பேரா. சி. இலக்குவனார்** இனையவர் தம்மோடெல்லாம் ஒன்றாகி உடனாகிய உறைவாகி நின்ற தொடர்புத் தோழமைச் செல்வர் முத்தமிழ்க் காலவர்.

திண்ணைப் பள்ளியளவிலே படிப்பை நிறுத்திக் கொண்டாலும் திண்ணிய நூலோதாளராய், நூல் படைப்பாளராய், புகழ் வாய்ந்த பொழிவாளராய்த் தொடர்ந்து தமிழுலாக் கொண்டவர் முத்தமிழ்க் காவலர்.

முத்தமிழும் காக்கும் கடப்பாடுகளைக் கருதி வழங்கப்படுகின்ற **முத்தமிழ்க் காவலர்** என்னும் சிறப்புத் தகவமைந்த அவர், **தமிழ் மருந்துகள்** என்ற நூல் தந்தும் சித்த மருத்துவ இயக்குநராகித் தமிழ் மருத்துவத் துறைக்கும், தமிழ் வழிக் கல்வித் துறைக்கும் செய்துவந்த அளப்பருந்தொண்டுகள் தமிழுள்ளங்களைத் தளிர்ப்பச் செய்வனவாகும்.

இளமையிலே பேரறிவு, பெரு முதுமையிலே இளமை வீறு ஆகிய இரண்டும் அமைவது அரிது. அதுவும் ஒருவர்க்கு அமைவது மிக அரிது! அந்த அருமையை இயல்பாகப் பெற்றுத் திகழ்ந்த பெருந் தக்கார் முத்தமிழ்க் காவலர்.

அவர்தம் நெறிநின்ற வாழ்வு நீடுவாழ்வாய் வாழ்வார்க்குப் படிவதாக.

5. பொது நலம் போற்றல்

“நாட்டில் பொதுநலம் போற்றுதல் குறைந்து விட்டது; தன்னலமே குறியாக வாழ்பவர்கள் பெருகி விட்டனர்” என அங்கு இங்கு என்னாமல், எல்லார் பேச்சிலும் எழுத்திலும் இடம்பெறுகின்றன.

பொதுநலம் போற்றுதல் குறைந்துவிட்டதா?

ஆம்! குறைந்து விட்டதுதான்!

பொதுநலம் போற்றுதல் பொதுமக்களிடம் குறைந்துவிட்டதா?

அலுவலர்களிடம் - ஆட்சியரிடம் - குறைந்து விட்டதா? ஆம்! எல்லாரிடமும் குறைந்துள்ளமை வெளிப்படையே! ஒருசிலர் தவிர, இவ்வாறு பெரும் பாலோரிடம் பொதுநலம் போற்றல் குறைந்தமை ஏன்?

பொதுநலம் போற்ற வேண்டிய சான்றோர் - பண் பாளர் எண்ணிக்கை குறைந்து விட்டது! இருப்பவர் களும் ‘ஏனோ தானோ’ போக்குடையவர் ஆகிவிட்ட னர்! இடித்துரைக்க வல்லாரும் ‘நிரந்து இனிது சொல்லி, விரைந்து தொழில் கேட்கச் செய்யவும்’ அமைவு இல்லாமல், தனித்தனி முனைப்புகள் உடைய ராயினர்!

வழிகாட்டியாகவும், நடைமுறைப் படுத்துதலில் ஊற்றமிக்கவராகவும் இருக்கவேண்டிய அரசியல் தலைவர்களும், ‘தம்மைச் சார்ந்தவர் சால்பாளர்’

'தம்மைச் சாராதவர் சால்புக்கேடர்' என ஒருமொத்த முடிவு கொண்டு, கண்ணை மூடிக் கொண்டு 'சரி' என்பது; அல்லது, கண்ணை மூடிக் கொண்டு 'தப்பு' என்பது - என்ற போக்கில் அமைந்து விட்டனர். இந் நிலையில் வரவரப் பொதுநலம் போற்றுதல் குறையவே நேரும்!

ஆட்சியில் அமர்ந்திருக்கும் எவர் எனினும் அவர் செய்தது எது எனினும் அது, அவர் செய்த தனிச் செயலோ, அவர் தனிச் சொத்தோ ஆகா! அவை நாட்டின் சொத்து! பொதுச் சொத்து!

ஆழமான செய்திகளைத் தேடிக்கண்டு-தோண்டிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய தில்லை. வெளிப் படையான சிலவற்றைச் சொன்னாலே புரியும். ஏனெனில், எழுதுபவனைப் போலவே - அல்லது அதனினும் மிகவே பொதுமக்களும் அறிந்துளர்.

மேனாள் ஆட்சியில் **இந்திரா அம்மையார்** நெருக்கடி நிலையைக் கொண்டு வந்தார். அது சனவரி 30. அந்நாளில் யான் சென்னையில் இருந்தேன். அடுத்த நாள் சனவரி 31. ஒரு நாள் முழுமையும் ஆகவில்லை. 18 மணிநேரம்! **அண்ணா நினைவிடத்தின்** ஒளி எங்கே போனது? பொலிவு எங்கே போனது? இந்திரா அம்மையாரா விளக்கை வந்து அணைத்தார்? அரசு-ஆட்சி-மாறலாம்! ஆனால், நாட்டுச்சொத்தைப் பேணிக்காக்க வேண்டும் அல்லவா! மேலும் பத்துப் பதினைந்து நாள் கழித்துப் பார்த்தால் பாலைவனக் காட்சியாகி விட்டது அது. **முதல்வர் கலைஞர்** ஆர்வத் தளிர்ப்பிலும் திறத்திலும் உருவாக்கம் பெற்றவை **வள்ளுவர் கோட்டமும், பூம்புகாரும்**! அவை அவர்

சொத்தா, நாட்டுச் சொத்தா? நாட்டுச் சொத்து ஆகிய அதனை எவர் ஆட்சி ஏற்றாலும் சிதையாமல், சீரழிவு இல்லாமல் காக்க வேண்டியது தானே பொது நலம் போற்றல்!

ஆட்சி மாறிய ஒன்றாலேயே நிறுவியவர்க்கு அழைப்பும் அனுப்பாமல், நிறுவிய கால்கோள் கல்லையும் நினைவுறாமல் திறப்பு விழாவை, அடுத்து வந்த ம. கோ. இரா (M. G. R) அரசு செய்தால், அதனை **ஆளுநரும்** ஏற்றால்-பொதுநலம் போற்றாமை எங்கே தொடங்கி நாட்டைக் கெடுக்கிறது என்பது புலப்படும்.

அப்படியே, பூம்புகார் இருந்த பொலிவும், 'மெய்யாகவே பூம்புகார் பண்டு இவ்வாறு இருந்திருத்தலும் ஐயமே' என்று பாராட்டுமாறு அமைந்த பூம்புகார் - காண்பவர் கண்களெல்லாம் கண்ணீர் வடிக்கும் பாழ்நகராகத் தோற்றம் தந்ததே - தருவதாயிற்றே - ஏன்? அதனை நிறுவியவர் சொத்தா? நாட்டுப் பொதுச் சொத்தா? பொதுமையை அழிபடச் செய்வதிலே அவ்வளவு பூரிப்பா? எண்ணிப் பார்ப்பவர் உள்ளத்தில் எவ்வளவு எள்ளத் தக்கதும், நாணத்தக்கதும் நலக் கேடானதும் ஆகிய செயல்?

இனிவள்ளுவர் கோட்டத்திலே '**நெறிபரப்பு மையம்**' ஒன்றைத் தொடங்கினார் ம. கோ. இரா. பின்னே, கலைஞர் அரசில், அந்நெறி பரப்புமையத்தை மூடவேண்டியது என்ன? துறைக்குத் தக்கார் தகவிலர் என்பதை ஆயலாம்? துறையே தக்கது தகவிலது என ஆட்சி மாற்ற வகையால் நேரலாமா? நேர்ந்ததே! ஏன்?

ம. கோ. இரா. தொடங்கியதும், தொடக்கவிழா நடத்தப்பட்டதும், இடம் ஈதெனத் தீர்மானிக்கப்

பட்டதும், ஏன்? தனியலுவலரும் அலுவலகமுமே அமைந்து செயலாற்றத் தொடங்கியதும் ஆகிய **'அகில உலகத் தமிழ்ச் சங்கம்'** உருத்தெரியாமல் ஒழிந்து போவானேன்? தோற்றுவித்தவர் சொந்தச் சொத்தா? சொந்த அமைப்பா?

குமரி முனையில் வள்ளுவர் சிலையமைப்பு என்ன, சென்னைக் கடற்கரையில் ம. கோ. இரா. நினைவிட மாற்றம் என்ன, காவிரி நீர்ச்சிக்கல் என்ன, கிருட்டிணா ஆற்று நீர்த்திட்டமென்ன? வீராணத் திட்டமென்ன? இவை நாட்டுத் திட்டங்கள் தாமே! இவற்றை நிறைவேற்றலில் என்ன கட்சிப்பார்வை! தனித்தனித் தலைமைப் பார்வை!

பொதுநலம் போற்றாமை மேல்மட்டத்தில் ஏற்பட்டால், கீழ்மட்டத்தில் தானா, அவர்கள் கொத் தடிமை கொண்டுள்ள மட்டத்தில் தானா போற்றுதல் காணமுடியும்?

கட்சி - அரசியல் - சார்பு - ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டுப், பொது நலம் போற்றும் சான்றோர் அமைப்பு ஒன்று கட்டாயம் தேவை! அது, துணிந்து அவ்வப்போது தக்கதைப் பாராட்டலும் தகவில்லதைக் கண்டித்தலும் கடனாகக் கொள்ளல் தேவை. அந்நிலைமையே நாட்டு நலத்தைக் காப்பது என்பதால் தான்,

> "பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
> மண்புக்கு மாய்வது மன்" (996)

என்றும்,

> "சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
> தாங்காது மன்னோ பொறை" (597)

என்றும் தெய்வப் புலவர் அருளினார். அவர்கண்ட சான்றோர் அவையம் தோன்றிக் கடனாற்றவும், அத்தகைய அவையைத் தங்களைக் காக்க வந்த 'காவல் அமைப்பு' என்று அரசியல் கட்சிகள் எண்ணி மதிக்கவும் உணர்வு உண்டாகுமானால் பொதுநலம் பொலியுமாம்.

6. நோய்நாடலும் நோய் முதல்நாடலும்

ஆக்கத்தில் பெரும் பங்கு கொள்ள வேண்டுமா?

அழிபாட்டில் பெரும் பங்கு கொள்ளவேண்டுமா?

இரண்டும் '**கட்சி**'யாலும் முடியும்; '**காட்சி**'யாலும் முடியும். 'கட்சி' 'காட்சி' என்னும் இரண்டடுள்ளும் ஒன்றைக் கூறுக என்றால் கட்சி புகாத இடத்தும் புகுந்து ஆட்டம் காட்டுவதே **காட்சியாகும்.** ஆதலால் ஆக்கமும் கேடும் செய்வதில் காட்சிக்கு இணை காட்சியேதான்.

"இதோ பாருங்கள்! என் கைக்குள்ளே உலகம் இருக்கிறது" என்று ஒரு கூட்டத்தினரை வியப்பில் ஆழ்த்தி, கைக்குள் இருந்த திருக்குறளைக் காட்டி இதோ பாருங்கள்! உலகம் என விளக்கிய **கலை வாணர்** விளக்கம் திரைக்காட்சியானதால் எத்தனை கோடிப் பேர்க்குத் திருக்குறள் அறிமுகமாயிற்று என்பது நாடறியும்!

அதனை எந்த ஒரு நூலும் எந்த ஒரு கதையும், எந்த ஒரு பட்டிமன்றமும், அந்த அளவில் பரப்பி விட முடியாது. அத்தகைய அரிய பரப்புதல் கருவி திரைக் காட்சித் துறை.

'வள்ளுவர் காட்டும் வழி' என்பது சில மணித் துளியளவே காட்டப்பட்டாலும், உப்புச் சப்பு

இல்லாதனவாகப் பல இடம் பெற்றாலும், அதன் பரப்புதல் விரிவுடையதேயாம். ஏனெனில் தொலைக் காட்சி அத்தகைய விரிவுடைய விளம்பரக் கருவியே யாம்.

ஆனால் இத்தகு ஆக்கங்களை - பண்பாடுகளை - சீர் திருத்தங்களை முன்னேற்ற முயற்சிகளை - அறிவியல் மாண்புகளை - அருள்நெறிகளை மட்டுமே காட்டுகின்றனவா திரைக்காட்சிகளும், தொலைக் காட்சிகளும்!

எத்தகைய அருவறுப்பான காட்சிகள் கலைக் கோலம் கொண்டு கண்ணராவியாகக் காட்டப்படு கின்றன. காசைப் பறித்துக் கயமையைப் பூசி விடு கின்றன.

எடுத்தவற்றுக்கெல்லாம் சண்டை! குத்து-வெட்டு - கொலை! கொள்ளை-கொடுமை-கற்பழிப்பு-காதற் காட்சிப் பெயரால் எவரெவர் உள்ளங்களையும் கெடுத்தல்! கல்விக் கூடங்களையும் கூத்துக்களமாக்கிக் கும்மாள மிடல்!

அலுவலகங்களையும் அரட்டைக் களமாக்கல்!

நாட்டின் நடைமுறையில், "உள்ளவற்றைத் தானே காட்டுகிறோம்" என்னும் பெயரால், அதனைக் காண்பவர் மனத்தைக் கீழ்மைக்கு இடமாக்குவதற்குப் பெயர் கொலையா? கலையா?

இழி காட்சியால் ஒரு படம் பணம் குவித்தது என்றால், அதற்கு மேல் பணம் குவிக்க அதனினும் இழி காட்சியை எடுத்தல், ஒரு வன்முறையால் படம் வெற்றி என்றால் அதனினும் வன்முறையாக எடுத்தல் எனக் கீழே கீழே போய்க் கொண்டிருக்கும் திரைக் காட்

சிக்குத் திட்டமான சட்டம் வேண்டாமாம்! சீரான தணிக்கை வேண்டாமாம்!

தணிக்கைத்துறை என்பது கண்துடைப்பாகத் தான் பெரும்பாலும் செயல்படுதல் எவரும் அறிந்தது. அவருள் பெரும்பாலோர் எவ்வெவற்றுக்கோ அடிமைப் பட்டுச் சான்றிதழ் வழங்குதல் கண்கூடு. அதுவும் கூடாது என்பது ஒட்டு மொத்தமாகப் பண்பாட்டைக் கெடுக்க உரிமைப்பட்டயம் தர வேண்டும் என்பதாம்!

ஏதோ திறவாக் கண்ணைத்திறந்து, நடுவண் அரசு சில விதிமுறைகளைத் தணிக்கைக் குழுவுக்குத் தந்துள்ளது. அதுவும் தானே உணர்ந்து தந்தது இல்லை. அதன் தடித்த தோலில் அப்படி உணர்ச்சி ஏற்படவா செய்யும்? தொண்டு நிறுவனங்களும் மகளிர் அமைப்பு களும் பல்கால் வலியுறுத்தி வலியுறுத்தித் தணிக்கை விதிகளை உருவாக்கி உள்ளது. அதனை எதிர்த்துப் போராட்டம்-கூச்சல்-மறியல்-நிகழ்த்து கின்றது திரைப்படத்துறை!

அப்படித்தான் என்ன ஆகாத சட்டங்களைக் கொண்டுவந்துள்ளது அரசு?

ஆடற் காட்சிகளில் அருவறுப்பான உடலசை வுகள் ஆகா.

மார்பகம் தெரிய உடை உடுத்துதல் - அதனையும் பன்முறை நெருக்கக் காட்சியாகக் காட்டுதல் - ஆகா.

இரு பொருள் தரும் உரையாடல் ஆகாது.

படுக்கையறைக் காட்சி - காதல் காட்சி முதலி யவை வெறியேற்றா வகையில் அமைதல் வேண்டும்.

முத்தக் காட்சி, உந்தியை (தொப்புளை)த் தொடுதல் ஆகியவை விலக்கப்பட வேண்டும்.

மகளிரை இழிவுபடுத்தி நாணச் செய்யும் காட்சி களைத் தவிர்த்தல் வேண்டும். என்பவை சில.

பண்பாடுடைய எவரேனும் இவற்றை வேண்டும் என வரவேற்பாரா? இப்படத்துறையில் ஈடுபட்டுள்ள வர்களே தம் மக்கள், மனைவியர்க்குத் தக்க செய்திகள் இவையெனத் தருதற்கு மனச் சான்றுடன் விரும்புவரா?

கருக்கொண்ட மகளிர், நோயர், உடற்குறையர் ஆகியவரைக் கொடுமைப்படுத்துதல், விலங்குகளை வன்முறைக் காட்சிகளில் பயன்படுத்துதல், மகளிரைப் பரத்தமையில் ஈடுபடுத்துதல், தற்கொலைக் காட்சி, குருதி ஒழுகவும் உறுப்புகளை இழக்கவும் சண்டை யிடும் காட்சி, குண்டு வைத்துப் பொது இடங்களைத் தகர்ப்பது போன்ற காட்சி ஆகியவற்றைத் தவிர்த்தல் என்பனவும் தணிக்கை விதியில் உள்ளனவே!

இவற்றைத் தவிர்த்தல் பண்பாட்டை விரும்பும் எவரும் விரும்பக் கூடியவைதாமே!

இனிக் கட்சியையும் கட்சி அரசியலையும் காக்கும் வகையிலும் தணிக்கை விதிகள் உள்ளன. அவை அரசின் இழிந்த தற்காப்புக் கொள்கையென வெளிப் படல் உண்மை. அவை:

காவல் துறை அலுவலகத்துள் புகுந்து அலுவலர் களையும் காவலர்களையும் தாக்குதலும் தரக்குறை வாகக் பேசுதலும் ஆகா.

தலைமையமைச்சர், முதலமைச்சர், அமைச்சர், பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஆகியோர் நாடு கெடுக்கும் செயலில் ஈடுபடுவது போன்றோ, கயவர் கூட்டத்துடன் சேர்ந்து செயலாற்றுவது போன்றோ - காட்சிகள் இருத்தல் ஆகா என்பவை.

இவை அரசின் அறமற்ற நிலையையும் கையால் ஆகாத்தன்மையையும் பறையடித்துக் காட்டுவனவாம்!

இற்றை மேனிலை அ்லுவலர், ஆட்சியர் மெய்ந் நிலைகளைச் செய்தித் தாள்களின் வழியேயும், நேரிடை வழியேயும் அறிபவர் எவர்க்கும் இக்காட்சிகளை யெல்லாம் 'வந்து பார்' என்பதற்குத் தக நடைமுறை இருத்தல் கண்கூடு!

இக்காட்சிகளைக் காட்டல் ஆகாது என்பதற்கு முன் இந்நிலைமைகள் நாட்டில் இல்லா வகையில் தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும் திருத்திக் கொள்ளுதல் வேண்டும். அல்லவோ! அதனைச் செய்வதை விடுத்து, அக் காட்சிகள் படத்தில் இடம் பெறல் கூடாது என்பது இழிவிலும் இழிந்த தற்காப்பு முறையாகும்!

காவல் துறையில் நிகழும் கயமைச் செயல்கள் நாட்டுக்குப் புற்று நோயினும் புற்றுநோய் அல்லவா!

அமைச்சர்களின் அழி செயல்களுக்கு இணை யான மாரடைப்பு நோய் நாட்டுக்கு உண்டா?

அவை சீராக இருந்திருக்குமானால், காட்சித் துறை பண்பாட்டுக்கு வாய்த்த தொற்று நோய்த் துறையாக மாறி இருக்கவே இராதே!

ஆடவர் மகளிரைப் படுத்தும் இழிமை, மகளிரே மகளிரைப் படுத்தும் இழிமை, தொடர்ந்து உழைக்கும் மனையானை உறிஞ்சி வாழ்வதே வாழ்வாகிப் போன கொடுமைமிக்க கணவன் சுற்றம், இவற்றையெல்லாம் காட்டாத அரசியல் கட்சிகள் - படங்களின் வெளி யீட்டு நிறுவனங்கள் - உண்டா? தெருக்குப்பையை வீட்டுக்குள் கொட்டுதற்கோ சின்ன திரைகள்!

தந்தை பெரியார் பெயர் சொல்லாக் கட்சி உண்டா? காந்திபெயர் கூறாக் கட்சி உண்டா? அப் பெருமக்களுக்குப் படையலா இக்காட்சிகள்!

ஆதலால் அவ்வகையில், நாட்டு நலத்திற்கு நல்லதொரு மருத்துவம் கட்டாயம் வேண்டும்! அது,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (948)

என்பதேயாம்!

7. துறைத் தேர்வும் திருக்குறளும்

'தெரிந்து வினையாடல்' என்பது திருக்குறளில் ஓரதிகாரம். அது, ஒரு செயலுக்குத் தக்கார் இவரெனத் தெளிந்து அவரை அச் செயலுக்கு உரியவராக்குதல் பற்றியதாகும்.

செயலாற்றுவானை ஆராய்தல் வேண்டும். செயலையும் ஆராய்தல் வேண்டும். இச்செயலை இவன் உரிய காலத்தாலும் சிறப்பாலும் செய்து முடிக்கத் தக்கான் என்று தெளிவுண்டாகுமானால் அவனிடம் அச் செயலை - துறையை - ஒப்படைத்தல் வேண்டும்.

> *"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு*
> *எய்த உணர்ந்து செயல்."*

என்பது அது (516). மேலும்,

இச்செயலை இவ்வகையால் இவன் சிறப்பாகச் செய்வான் என்பதை ஆராய்ந்து அச்செயலை அவன் பொறுப்பில் விடுதல் வேண்டும் என்றும் கூறுகிறார்.

> *"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
> *அதனை அவன்கண் விடல்."* (517)

இனி, இவன் எனக்கு வேண்டியவன், நெருங்கியவன், உறவினன், அன்பன், நண்பன், உதவியோன், மக்கட் செல்வாக்காளன், மதிஞன் எனக் கருதிச் செயல் திறம் இல்லானைச் சிறந்தானாகக் காட்டி, ஒருதுறைப்

பொறுப்பாளன் ஆக்குதல் தக்கதன்று; தகாததும், தீயதும் ஆம்.

"அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று." (515)

எவ்வெத் துறைக்கும் - செயலுக்கும் - எவ்வெவரும் தகுதியானவரே எனக் கண்ணை மூடிக் கொண்டு தேர்வு செய்து விடுதல் ஆகாது. தக்கார் எனத் தேர்ந்தெடுக் கப்பட்டவரையும் அவர்க்குத் தக்கதுறை ஈதெனத் தெளியப்பட்ட துறைக்கே பொறுப்பாளர் ஆக்குதல் வேண்டும். இல்லையேல் அவர்க்கோ, அவர் சார்ந்த துறைக்கோ, பல துறைகளைக் கொண்ட அரசுக்கோ, அரசுசார் மக்களுக்கோ நன்று ஆகாதாம்.

"தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்." (509)

இச்செயலைச் செய்தற்கு - இத்துறையை ஏற்றற்கு - உரிய தகுதியாளன் இவன் என்பதை ஆராய்ந்த பின்னர் அச்செயலை - அத்துறையைச் செய்தற்கு முழுவதும் உரியவனாகச் செய்து விடுதல் வேண்டும். **பொறுப் புக்குத் தகுதியானவரைத் தேர்ந்து அமர்த்தி விட்டு, ஊடே ஊடே தலையிட்டும், இடையிட்டும், முட்டுக் கட்டையிடுவதும், முரண்படுவதும், இரு பாலும் கேடாகித், தீமைக்கும், செயல்படாமைக்கும் இடமாக்கிவிடும்.**

"வினைக்குரிமை நாடிய பின்றை, அவனை
அதற்குரிய னாகச் செயல்." (518)

ஏற்றுக்கொண்ட செயலை அல்லது துறையைச் செம்மையாகச் செய்கின்ற தேர்ச்சியாளன் செயல் தொடர்பினையும் செய்வகைத் தொடர்பினையும்

வேறாகவும் மாறாகவும் தலைமையாளன் நினைத்து மாறுகொள்ளுவான் எனின், செயலும் செயலால் உண்டாகும் பயனும் பாழ்பட்டுப் போகும்.

வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக
நினைப்பானை நீங்கும் திரு. (519)

வேண்டாத் தலையீடு வேண்டும் நலங்களை ஆக்காததுடன், வேண்டா விளைவுகள் உண்டாக இடமாக இருப்பதுடன், ஆட்சிச் செல்வம் நீங்கிக் கைவிட்டுப் போவதற்கும் இடமாக்கிவிடும். பல்லார் பகையும், நல்லார் கைவிடலும் என்னதான் செய்யா!

தலைமையாக இருப்பார் பிறர் துறையில் அறவே தலையிடக் கூடாது என்பது வள்ளுவர் பார்வை அன்று. செவ்வையாக நடைபெறும்போது வீணாகத் தலையிட்டுக் கெடுத்தல் ஆகாது என்பதே வள்ளுவப் பார்வை.

செவ்வையாக நடக்கும் செயற் பாட்டை அறிந்து பாராட்டுதல் பெரும்பயன் செய்யும். அவ்வாறே ஏதேனும் சிக்கல் உண்டாயின் அதற்குத் துணை வேண்டும் போதில் துணைநின்று ஆக்கப்பாடு செய்து அரவணைத்தலும் நலம் பயக்கும்.

பொறுப்புத் தந்தவர் பொறுப்பைச் செய்வதற்குத் தடையாக நிற்கிறாரே என்னும் **எண்ணம் ஏற்படு தலும் இல்லாத வகையில் மேலாண்மை இருத்தல் வேண்டும். அதற்கென மேலாண்மையே கூடாது என்று முடிவு செய்தல் தவறாகும். ஏனெனில்,**

"எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்." (514)

என்பார் அவர்.

எத்தனை வழிகளால் ஆராய்ந்து தெளிவு செய்யப்பட்டாலும் செயலை மேற்கொண்டு செய்யும் போது வேறுபட்டு விடுவாரும் உளர்; அவரை அவர் போக்கிலே விட்டுவிட்டால் ஆட்சி என்னாம்! ஓர் உறுப்பு, கெட்டுப் போனது என்று விட்டுவிட்டால், அக்கேடு அப்படி அப்படியே பரவி முழுதுடலுக்கும் கேடாவது இல்லையா? காலில் முள்ளைத்து, புரை யோடிப்போய்க் காலையே எடுக்கவும், உயிரையே போக்கவும் காணல் இல்லையா? **முதற்கண்ணேயே விழிப்பாக இருந்திருப்பின் சீர்செய்திருக்க முடியுமே!** பேரழிவு வாராமல் காத்திருக்க முடியுமே! அதனால்தான் விழிப்புமிக்க வள்ளுவர்,

"நாடொறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு." (520)

என்றார்.

செயலாற்ற வல்லவன் செம்மையிலேயே உலகியல் செம்மை அடங்கியிருத்தலால், தலைவனாக இருப்பவன் **செயலாற்றுபவனை நாள்தோறும் தவறாமல் ஆராய்தல் வேண்டும்** என்பது எவ்வளவு கட்டாயத் தேவை!

8. இனிப்பும் கசப்பும்

ஈரடியால் உலகளந்த வள்ளுவப்பெருமகனார் உள்ளத்தின் உயர்வென 133 அடி உயரத்தில் கன்னியா குமரி முக்கடல் கூடலில் எழுப்பப் பட்ட உலக விந்தை யாம் சிலையை எண்ண எண்ணத் தமிழ் உள்ளங் களுக்கெல்லாம் எத்துணை இனிப்பு! பேரினிப்பு!

சிலை உயரத்தால் மட்டுமின்றி மலைமேல் வானோங்கி நிற்றல், வள்ளுவ வாழ்வுக்கு வாய்த்த எடுத்துக் காட்டாய் இலங்குவதாம்.

சிலை ஓங்கி உயர்ந்து நிற்கும் இடம் மலை; கடல் உள்ளே அமைந்த மலை; எத்தனை கோடி கோடி முறை அலை மோதினாலும் அசையா நிலை பெற்ற மலை! மலைமேல் நிற்கும் சிலைக்கும் அதே நிலை! என்ன அருமை! வள்ளுவர்,

> *"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்*
> *மலையினும் மாணப் பெரிது."* (124)

என்று கூறியதற்கு அவரே சான்றாக உலகம் கண் ணேரில் கண்டு கொள்ள வாய்த்த சிலை அல்லவா அது. அதனை எழுப்பி நிற்க எண்ணி எண்ணி வேண்டும் ஏந்துகள் எல்லாம் செய்து, வள்ளுவர்க்கு எவரும் எடுக்காத ஏற்றம் தந்த முதல்வர் - ஆட்சி முதல்வர் மட்டுமல்லர்; கலை முதல்வரும் ஆவர்! அவர்க்கு வாய்த்த உள்ளத்தெழுந்த - எழுதிப்பார்த்து இருந்த - உயிரோவியத்தைத் தம் உள்ளத்தே பதித்து அள்ளூறி நின்று ஆக்கப்படைப்பாக்கிய சிற்பியார் கணபதி

யாரும் கலைமுதல்வர்தாமே! முதல்வர்க்கு முதல்வரே முதலாகி விட்ட முதன்மையல்லவோ இது!

வள்ளுவர் கோட்டம் கண்ட வளவர் - பேருந்து களில் எல்லாம் குறள் உலா வரச் செய்த செம்மல் - குறளோவியமும் உரையும் தீட்டிய தோன்றல், முதலா யிரத்திற்கு முன் இருந்த பொய்யாமொழியாரை ஈராயிர நிறைவும் மூவாயிர முதலும் விழாக்கோலம் கொள்ளத் தமிழுலகே முக்கடல் முன் முழங்கு கடலாய்க் காட்சி யளிக்க நிகழ்ந்த சீர்மை எத்தகைய இனிப்பு! உள்ளு தோறும் ஊற்றெடுக்கும் **இனிப்பு! இது, இனிப்பு! எது கசப்பு?**

சொல்லாமலே தெரியும் செய்திதான் அது!

பெங்களூரில் அல்சூர் ஏரிக்கரையில் தமிழ்ப் பெரியார் அமரர் நீலகண்டர் சதுக்கத்தில் 24.5.1991இலேயே மாநகராட்சி இசைவு தந்தும் பின்னே மறுக்கப்பட்டு மூடிக்கிடக்கும் திருவள்ளுவர் சிலை!

கலங்கரை விளக்கினும் ஓங்கி நிற்கும் வள்ளுவர் சிலையைக் கண்டு மகிழ்ந்த கண்கள், மூடிக்கிடக்கும் வள்ளுவர் சிலையைக் கண்டு கண்ணீர் வடிக்கும் நிலை!

வள்ளுவர்க்கா இந்த இழிமை! தமிழுக்கா இந்த இழிமை! தமிழர்க்கா இந்த இழிமை! இல்லை! இல்லை! இல்லை!

கருநாடக அரசுக்கு இழிமை! தான் கொடுத்த ஆணையைத் தானே மறுத்து மீட்டுக்கொண்ட மாநகராட்சிக்கு இழிமை! சிலையைத் திறக்கவிடாமல் தடுப்பாணை பெற்று வழக்குமன்றம் ஏறிய புலிகேசி அமைப்பினர்க்குத் தீரா இழிமை! உலகம் வாழ ஒரு நூல் செய்த அறவர் சிலையைத் திறக்க விடாமல்

திறக்க நினைவாரைச் சிறைப்படுத்தியும் சிறுமைப்படுத் தியும் வரும் இவற்றைக் கண்டும் கானாக் கண்ணராய்க் கேளாச் செவியராய்ப் பேசா வாயராய் முடங்கிக் கிடக்கும் கருநாடகக் கன்னடச் சான்றோர்க்கோ இணை இல்லா இழிமை! இழிமையிலும் இழிமை!

"கேட்டிலும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்." (796)

என்னும் பொய்யாமொழியின் தேர்ந்த செய்தி, இக் கசப்பின் ஊடே கிளர்கின்றது. இந்நிலையில்

"வையகம் வாழ்வாங்கு வாழ நூல் செய்த வள்ளுவர்க்கா இந்த நிலை" என மைய அரசு எண்ணிச் செயல்பட வேண்டியபொழுது இது! இந்திய ஒருமைப் பாட்டுக்கு உலைவைக்கும் 'உட்பகை' இது என்று குடியரசுத் தலைவரும், தலைமையமைச்சரும் உணர்ந்து உடனே அறிவுறுத்த வேண்டிய நேரம்!

தமிழகத்திற்கும் தமிழுக்கும் கேடு செய்வதில் தம் கட்சிகளை எல்லாம் மறந்து ஒன்றுபட்டு நிற்கும் கருநாடகம் கண்டு, கற்றுக் கொள்ளுமாறு தமிழக அரசும், கட்சிகளும், சான்றோரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டிய நேரம் இது.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி." (660)

என முறையுரைத்த முறைமையர் சிலைக்கா இம்முடிவு என முறை மன்றங்கள் எண்ணி முடிவெடுக்க வேண்டிய கட்டாய நேரமும் இது.

உலகவர் பார்வையில் கருநாடகம் முக்காடு போடாமல் நன்முகம் காட்டல் வேண்டும் என்பது நம் விழைவு!

୨. ஒன்றானோம், வென்றானோம்!

16.499இல் தஞ்சையில் தமிழிசைவிழா. அவ்விழாவில் பேசிய யான் ஆங்கு நிகழ்ந்த இசையின் இனிமையில் ஒன்றினேன்; கருவி இசையில் கலந்து நின்றேன்; என் உரையில் கூறினேன்!

"இரண்டு அகவை இசைக் குழந்தை, 'இளங்குமரா, இளங்குமரா,' இந்த இரண்டு அகவைக் குழந்தையின் இயக்கத்தைக் கண்டாயா?"

"மண்ணைப் பேசவைக்கிறான் - தமிழன்!(குடம்)
நீரைப் பேசவைக்கிறான் - தமிழன்! (நீரலை)
மரத்தைப் பேச வைக்கிறான் - தமிழன்! (குழல்)
நரம்பைப் பேச வைக்கிறான் - தமிழன்! (யாழ்)
தோலைப் பேச வைக்கிறான் - தமிழன்!
(மத்தளம்)

மாழையை (உலோகத்தை)ப் பேச வைக்கிறான் - தமிழன்! (சல்லரி, கின்னரி)

ஒன்றாகப் பேச வைக்கிறான்!
நன்றாகப் பேச வைக்கிறான்!

நான்கு கருவிகள் இருந்தாலும், நாற்பது கருவிகள் கூடினாலும், ஒன்றாகப் பேச வைக்கிறான்! நன்றாகப் பேச வைக்கிறான்!

ஆனால்! ஆனால்!.... ....

அவன் மட்டும் ஒன்றாகப் பேசக் கருதமாட்டேன் என்கிறானே! ஒன்றாகப் பேசக் கற்கமாட்டேன் என்கிறானே! எப்படி அவன் உய்வான்? எப்படி அவன் இனம் உய்யும்?

அயல் அயல் நாட்டான் மட்டும் இல்லை; அண்டை அண்டை மாநிலத்தான் மட்டும் இல்லை; தமிழகத்திற்கு உள்ளாகவே வாழும் அயல் அயல் மொழியான் எப்படி ஒன்றாகப் பேசுகிறான் - நன்றாகப் பேசுகிறான் என்பதை உணரமாட்டேன் என்கிறானே! உருப்படுவானா?" என்று இந்த இசைக்குழந்தை இசை வாயால் என்னைக் கேட்கிறது. யான் என்ன சொல் வேன்? என்ன சொல்வேன்? நீங்கள் தான் சொல்ல வேண்டும்.

அண்டை மாநிலத்தார் நம் மண்ணை அவரவர் வாய்ப்பில் சுரண்டிய பொழுதில், ஒன்றாகக் குரல் கொடுத்தோமா? காவிரிச் சிக்கலுக்கு ஒன்றாகக் குரல் கொடுத்தோமா? கண்ணகி கோயிலுக்கு ஒன்றாகக் குரல் கொடுத்தோமா? வெங்காலூரில் திருவள்ளுவர் சிலை மூடிக்கிடப்பதற்கு ஒன்றாகக் குரல் கொடுத் தோமா?

ஈழச் சிக்கலுக்கு ஒன்றாகக் குரல் கொடுத்து உய்வு கொண்டோமா?

கச்சத்தீவைக் காவு கொடுத்தபோது, 'கை வைக்காதே' என்று உறுதியாய் நின்றோமா?

மூவாயிர ஆண்டுகளாய் மோதிவரும் வடமொழி யின் வல்லாண்மைக்கோ, முன்னூறு ஆண்டு ஆங்கில வல்லாண்மை, மழலையர் வாயில் கூட 'அம்மா அப்பா' என்று வருவதையும் பட்டி தொட்டிகளில்

எல்லாம் ஒழிக்கக் காண்கிறோமே இவ்வல்லாண்மைக்கோ ஒன்றாக நின்று ஒடுக்கப் புறப்பட்டோமா?" என்று வினாவினேன்.

24.499இல் அதே தஞ்சை மண்ணில் அரியதோர் எழுச்சி மாநாடு தி. க. மாநாடு; அதில் தஞ்சை இசை விழாவில் பொழிந்த கருத்தை நினைவூட்டித் தொடங்கினேன்! பல்லாயிரம் போரின் ஒருமித்த வாழ்த்துடன் - வழியனுப்புடன் சென்னைக்குச் சென்றேன். **எதற்கு?**

'சாவும்வரை உண்ணா நோன்பு நோற்க' **ஏன்?**

தமிழ்வழிக் கல்விக்காக! **எப்படி?**

சான்றோர் பேரவை அழைப்புப்படி! ஆணைப்படி!

என்று? எப்பொழுது?

25.499 ஞாயிறு காலை **9** மணி பேரணியுடன்! இரண்டு பேரவைகளிலும் வினாவிய வினாக்களுக்குப் பேரணி விடையளித்தது! ஒருவரா? இருவரா? ஓராயிரவரா? ஈராயிரவரா? பதினையாயிரவர்க்கு மேற்பட்டோர் பத்துமணிக் கடுவெயில் சுடுவெயிலில் **12.30** வரை ஓராள் நடையில்! ஒருவாய் முழக்கம் போல்!

ஆணை வழி நிற்கும் ஆளுமை மிக்க தமிழ்ப்படை இப்படை!

எழுச்சிப்படை இப்படை என்பதைக் காட்டிய நடை!

நூற்றுவர் பட்டியல் உண்ணா நோன்பிற்கு! ஆனால், காத்திருப்போர் பட்டியலில் நூற்றைம்பதின்மர்! வியப்பினும் வியப்பு! "வியத்தொறும்

வியத்தொறும் வியப்பு இறந்த வியப்பு” என்பது சங்கப் புறநானூற்றுத் தொடர்!

நூற்றுவர் நோன்பியருள் வாராதோர் ஓரிருவர் எனின், ஒரு பதின்மர் இரு பதின்மர் போட்டி! நோன்பில் அமர!

பட்டியலில் இல்லை எனின் என்ன?

ஒட்டியிருக்க என்ன தடை? ‘சார்பு உண்ணா நோன்பிகள் நாங்கள்’ எனச் சாரல் சார்ந்த சான்றோர்! தெருவில் விட்டு விட்டு, எங்களுக்கு என்ன வீட்டில் வேலை’ என்ற அழுத்தத்தில் ‘மும்மடங்கு பொலிந்த முகத்தோடு’ உண்ணா நோன்பியர்க்குப் பாதுகாப்பு வளையமாய் அமைந்த பெருமக்கள் - கட்டிளைஞர் - மகளிர் மாண்பர்!

“காவல் துறை, நோன்பியரைச் சிறைப்படுத் துமா?” அப்படி எளிதாய் வாராது! வந்தால், எங்கள் அனைவரையும் முதற்கண் சிறைப்படுத்தட்டும்! என்று இரவெல்லாம் சிறகுக்குள் வைத்துக் காக்கும் தாய்க் கோழி என்ன வாய்த்த உணர்வுக் கூட்டம்!

நூற்றுவர் நா, ஒரு நா! போற்றும் நா! சான்றோர் பேரவைச் சால்புப் பெருமக னார் தமிழண்ணல் நா! மேடை ஏறினால் மணிக்கணக்கில் பேசும் நாவரே நூற்று வரும்! ஆனால் தங்களுக்குத் தாங்களே இட்டுக் கொண்ட கட்டுப்பாட்டில் ஒன்றாய் நின்ற பேறு! உறுதியாய் நின்ற பேறு!

‘நீக்குப் போக்கு எதுவும் கூடாது; எங்கள் நோக்கு நிறைவேறும் வரை எங்கள் நிலையில் அசைவு அறவே இராது’ என்னும் துணிவு!

அசைக்க - ஆட்ட - இயலுமா? அசைத்தல், ஆட்டலும் ஒதுங்கின; ஒடுங்கின!

ஆட்சியில் இருப்பவர், முன்னை நாள் ஆணை களைக் கிடப்பில் போட்டனர். ஓராண்டா ஈராண்டா? 48 ஆண்டுகளுக்கு மேல்! **ஆட்சியில் அமரா நிலையில் கூறியவற்றை, ஆட்சியில் அமர்ந்ததும் மறந்து போகின்றனர்; மரத்துப் போகின்றனர்.**

தூண்டித் துலக்க முனைந்தால், துணைவப் பாராட்டத் துணிவும் இல்லை; துணையும் இல்லை, அவர்களுக்கு! மாறாகச் செய்வன வெல்லாம் செய்து விட்டு, அதனைச் சுட்டிக் காட்டினால், மாறாகப் பார்க்கும் பார்வையா மாண்புப் பார்வை?

உயிரைத் தந்து தமிழகப் பெயரைத் தந்தவரை, தமிழகப் பெயரைச் சூட்டியவரை மறந்து, சட்ட மன்ற ஆணையை மீறியவரை - மாறி நடையிடுபவரை, ஆருயிர் தந்தாவது நெறிப்படுத்த வேண்டும் என்னும் நேயம் மிக்கெழுந்த சான்றோரை நேரில் கண்டு நெஞ்சார வாழ்த்தி நெறி நின்றிருந்தால் என்றும் நன்றாகி இருக்கும்! ஆனாலும் மின்னல் கீற்றுப் போல ஓர் ஒளி.

அமைச்சுக்கட்டிலில் இல்லாமல் இருந்திருந்தால் எங்களோடு உண்ணாநோன்பு நோற்க நின்றிருக்கும் மாண்புமிகு தமிழ்க்குடிமகனார் பாலமாக இருந்து பாவமும் பழியும் வாராது காத்தார்!

முன் வைத்த கருத்துகள் மூன்றையும் மாண்புமிகு முதல்வர் இசைவொப்புகையுடன் முற்றாக நிறை வேற்றி முழு மகிழ்வு தந்தார். தமிழ்க்குடிமக்கள் அனை வர்க்கும் இன்பம் சேர்த்தார்! ஆனால் பின்னர் நிகழ்ந்தவை எவை?

சான்றோர் வேண்டியது என்ன? தமிழ்வழிக் கல்விக்கு நீதியரசர் **மோகன் குழு** வேண்டுகை என்ன? தமிழ்வழிக் கல்வியைச் **சட்டமாக்குக** என்பது. அரசு என்ன செய்தது? மீண்டும் சறுக்கல்! சறுக்கலுக்கு வாய்ப்பு! **ஆணை வழங்கியது.**

வழக்கம்போல் தமிழ்க்கேடர் முறைமன்றில் தமிழ்வழிக் கல்விக்குத் தடையாணை பெற்றனர். தமிழ்ப் போராட்டம் - **ஆணை என்னும் கண்துடைப்பால் கைகழுவப்பட்டது தமிழ்வழிக் கல்வி.**

என்று முற்றான தமிழுணர்வு முன்னின்று ஆட்சிக் கட்டில் ஏறுமோ, அன்றே தமிழ்வழிக் கல்வியும், தமிழ்வழி ஆட்சியும், தமிழ்வழி வழிபாடும் தமிழ்நாட்டில் உலாக்கொள்ளும் என்னும் நிலைமை! அச் சூழல் அமையாக்கால். தமிழ்நாட்டில் மண்ணுரிமைத் தமிழர், வந்தேறி நிலையரால் - தமிழால் வாழ்ந்தும் தமிழ்க்கேடு புரிவாரால் அயலவராகித் தம் மண்ணில் கொத்தடிமையர் நிலையிலேயே இருப்பர். மாறுமா நிலைமை? மாற்றுமா தமிழகத் தமிழ் உள்ளங்கள்?

10. எது பழி? எது புகழ்?

திருக்குறள் எண்கவனகர் பெ. இராமையனார் இருந்தார். அவர் காணுமிரு கண்ணையும் இழந்தவர். ஆனால் விழியுடையவர்களும் விழித்துத் திகைக்கும் அளவில் திருக்குறளில் திறம் காட்டினார்.

குறளைச் சொன்னால், எண்ணைச் சொன்னார்; எண்ணைச் சொன்னால், குறளைச் சொன்னார்; ஒரு சொல்லைச் சொன்னால், அச்சொல் வரும் குறள்களை யும் அவற்றின் எண்களையும் கூறினார். ஒருவர் இருவர் அல்லர்; எண்மர் பெயர் கேட்டு, அவர்கள் தாம் தாம் நினைத்த குறளின் தனித்தனி ஒவ்வோர் எழுத்தாகக் கூற, இடையிடையே பிறர் பிறர் வினாவ அவற்றுக்கு விடைதர, இடையிடையே மணியடிக்க, மலர் எறிய, அவற்றைக் கணக்கிட, புதுப் பாப் புனைய, இலாட சங்கிலி போட, பெருங்கணக்குகள் நினைவில் போட எல்லாமும் ஒருங்கே வாங்கி, அனைவரும் மகிழ்ந்து பாராட்ட விடையிறுத்து நினைவு வளம் காட்டினார்; விழியொளி இல்லாமை அவர்க்கு ஒரு பழியாகிவிட வில்லையே;

மாம்பழக்கவிச் சிங்க நாவலர் என்பார் பழனி யில் இருந்தார். இரண்டாம் அகவையிலேயே, அம்மை நோயால் பார்வை இழந்தார். எனினும் பாடுதற்கரிய வண்ணப் பாடல்கள் பல பாடினார்; பொருள்

காண்டற்கரிய மடக்குகள் பாடினார்; அவர் பெயரால் ஒரு திரட்டு நூல் வருமளவு பாடினார்.

'அந்தகக் கவி வீரராகவர்' பெயரிலேயே அவர்தம் பார்வையிலாக் குறை வெளிப்படுகின்றதே! அவர் "ஏடு ஆயிரம் கோடி எழுதாது தம் மனத்து எழுதிப்படித்த விரகர்; இமசேது பரியந்தம் எதிரிலாக் கவி வீரராகவர்" அவரே இவற்றைக் குறிப்பிடுகின்றார். ''எவரோ கண்டதை, நீவீர் கண்டது இது' எனப் பாடுவதைக் கண்ட வியப்பு (கண்டதிசயம்) பாடுதல் என்பர். அதில், தேர்ச்சி மிக்கவராகத் திகழ்ந்தார். பெரும்புலமைச் செல்வராக விளங்கினார். அதனால்,

"காணுமிரு கண்ணிழந்தும் கற்றகவி வீரர்சீர்
கோணாத தென்னே குமரேசா"

என ஒரு வினாவை எழுப்பி,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (392)

என ஒரு குறளை விடையாகத் தந்தார், "**கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார்**."

இனி, **இரட்டையருள்** ஒருவர் முடவர்; ஒருவர் குருடர்; அவர்கள் நாடெல்லாம் புலமையுலாக் கொண்ட புகழ்ப் பெருமக்கள்; "கலம்பகம் பாடுதலில் இணையில்லார்" எனப் பாராட்டப்பெற்றவர்கள்.

கிரேக்க நாட்டுத் தொல்பெரும் பாவலர் **ஓமர்** ஆங்கிலப் பெரும் பாலவர் **மில்தனார்** ஆகியோரும் பார்வையிலார் என்றே பகர்வர்:

இருநூறுக்கு மேற்பட்ட அரிய நூல்களை இயற்றிய கருப்பக்கிளர் **இராமசாமிப் புலவர்** காளைப் பருவமுதலே அரைகுறையில்லாமல் முற்றாகச் செவிப்

புலன் அற்றவர். தவத்திரு. மறைமலை யடிகளாரின் தகவார்ந்த மாணவராகத் திகழ்ந்து அரிய நூல்கள் பலவற்றை ஆக்கிப் படைத்த புலமைச் செல்வர் **இளவழகனாரும்** நட்டகவை தொட்டு அந்நிலையரே,

கழகக் காலத்திலும் ஐயூர் முடவனார், முடத் தாமக் கண்ணியார், முடக் கொற்றனார், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் எனப் புலமைச் செல் வர்கள் பலர் இருந்தமை தொகை நூல்களால் அறிய வருகின்றதாம்.

கையில்லாத ஒரு செல்வி, தன் கால்களாலேயே ஊசியால் தைக்கிறாள்; கண்ணாடி பற்றிச் சீப்பு வைத்துத் தலைசீவி முடிகிறாள். பொட்டு வைக்கிறாள்; பூ முடிக்கிறாள். தீப்பெட்டி எடுத்து அடுப்புப் பற்ற வைத்துப் பால் சுடவைத்து ஆற்றிப் பருகுகிறாள். இன்றுங் கண்ணேரில் காணும் காட்சிகள் இவை.

இவ்வெல்லார் உடற்குறைகளையும் ஒருங்கே கொண்டவர் **'கெலன் கெல்லர்'** என்பார்.

"நான் என் ஆறாந்திங்களிலேயே 'நலமா?' எனக் கேட்கத் தொடங்கி விட்டேன். ஒன்றாம் அகவை ஆகும் போதே நடக்கத் தொடங்கிவிட்டேன்" என்னும் அவர், "பிப்ரவரித் திங்கள் வந்தது. அதனுடன் நோயும் வந்தது. படுத்துவிட்டேன்; என் கண்களையும் காது களையும் கெடுத்துவிட்ட நோய் அது. புதிதாகப் பிறந்த குழந்தைபோல் நினைவற்றுக் கிடந்தேன். வயிற்றிலும் மூளையிலும் அடைப்பு உண்டாகிவிட்டது. காய்ச்சல் கடுமையாக வாட்டியது. நான் பிழைக்கவே மாட்டேன் என்ற நிலைமை வந்துவிட்டது. ஆனால், ஒருநாள் எதிர்பாராமல் காய்ச்சல் இறங்கிவிட்டது. இதைக்

கண்டு என் குடும்பத்தார் மகிழ்ந்தனர். 'எனக்கு இனி கண் திறக்காது; காது கேட்காது' என்று அவர்களில் எவருக்கும் தெரியாது. ஏன்? மருத்துவருக்குக் கூடத் தெரியாது!" என்று தம் நிலைமையைக் குறிப்பிடு கின்றார்.

ஒன்றரை அகவையிலேயே கண் குருடாகி, காது செவிடாகி, வாயும் ஊமையாகியவர். "வாழ்வே இருண்டு விட்டது" என்று அவரை அறிந்தவர்கள் முடிவு செய்துவிட்டனர்! ஆனால் அவரும் அவர் குடும்பத்தவரும் முயற்சியைக் கைவிட்டனர் அல்லர்.

விழியிழந்தோர் பள்ளிக்குச் சென்றார் கெலன். குமரிசல்லிவனார் ஆசிரியர்; அவரும் விழியிழந் தோரே! உணர்வுடன் கற்பித்தார். உணர்வுடன் கெலன் கற்றார். நுண்ணிய இசையையும் கேட்டார்; அரிய கருத்துக்களையும் எழுதினார். மார்க்கு டுவெய்ன் என்னும் ஆசிரியரால், "இந்நூற்றாண்டின் (பத்தொன்ப தாம் நூற்றாண்டில்) பெரியவர் என்று பாராட்டத் தக்கவர் இருவர். அவர் நெப்போலியனும் கெலன் கெல்லரும் ஆவர்' என்று பாராட்டப் பெற்றார். என்றிபோர்டு நிறுவனத்தில் நூற்றுக்கணக்கில் ஊனர் பணிசெய்தனர். சப்பானிய முடவர் ஒருவர் மூன்று சக்கர வண்டி கொண்டு இமயமுடி ஏறினார்; இவ்வாறு உலக வரலாற்றில் உறுப்புக்குறையர் உறுப்புக் குறையிலாரினும் விஞ்சியவராய் வெற்றி வாழ்வினராய் இலங்கியவர்கள் எத்துணைவர்?

வள்ளுவர் பார்வை வையகப்பார்வை; வாழ் வாங்கு வாழவைக்கும் பார்வை; "நீ நினைத்தால், முனைப்பாக நினைத்தால் உன் உறுப்புக்குறை ஒரு

குறையா? இல்லை! இல்லை!" என்று தட்டிக்கொடுத்து வழி காட்டும் பார்வை.

வள்ளுவர் சொல்கிறார்.

"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி" (618)

உறுப்புக் குறையைப் பழித்தார் உளர்; இழி வுரைத்தார் உளர்; எச்சப்பிறவி என்ன எண்ணினாரும் உளர்; தலைவிதி என்று காட்டினாரும் உளர். ஆனால் உறுப்புக்குறை பழியன்று; உறுப்புகள் எல்லாம் இருந்தும் வினையாற்றாப் பிறவியைக் குறையுடையது என்றார் திருவள்ளுவர்.

வாழ்வியல் வழியது வள்ளுவம் என்பதற்கு இக்குறள் சிறந்த சான்றேயன்றோ? இப்படிக்காண எண்ணிலாக் குறள்கள் உள்ளமையை எண்ணி எண்ணிப் பாருங்கள்! வெற்றி வாழ்வாக்க எண்ணுவார் எண்ணம்தானே, ஏந்தும் ஏற்றமுமாம்!

11. அறிவும் அழிவும்

அறமாவது எது?

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் - அறம்"

என்பது வள்ளுவம்.

அறிவாவது எது?

"அறிவு அற்றம் காக்கும் கருவி"

அதாவது அழிவு வராமல் காக்கின்ற கருவி என்பதும் வள்ளுவம். அவ்வாறானால் மாசமைந்த மனம் அறமுடையதாகாது; அழிவுடைய - அழிவாக்குகின்ற அறிவு அறிவாகாது என்பது இவற்றால் விளங்கும்.

அதனால் தான் நன்மகப்பேற்றை நயக்கும் வள்ளுவர், 'அறிவறிந்த மக்கட் பேறு" வேண்டும் என்றும், "பழிபிறங்காப் பண்புடை மக்கட்பேறு" வேண்டும் என்றும் மக்கட் பேற்றில் கூறுகிறார்.

அறிவிலாப் பண்போ, ஆக்கம் செய்யாது.

பண்பிலா அறிவோ, படுகேடு செய்யத் தவறாது.

ஆதலால்

அறிவும் பண்பும் ஒருங்கமைந்த பேறே பேறு என்றார்.

கல்வியைக் கூறும் போதும், கசடு இல்லாத கல்வி என்றே குறிக்கிறார்.

கற்றபடி நிற்கவே கற்க வேண்டும் என்றும் அங்கேயே குறிப்பிடுகிறார்.

அறிவுடைமையிலே, பிற உயிர்கள் அடையும் துயரைத் தம் துயராகக் கொள்ளுதலே அறிவுடை மைக்குச் சான்று என்பதைக் குறிக்கு முகத்தால்,

"அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை" (315)

என்றார்.

ஆனால், அறிவுலகத்தின் மாமணிகள் என்று சொல்லிக் கொள்ளும் நாடுகளின் அறிவுக் கூர்மை எப்படி உள்ளது.?

"எவ்வளவு மிகுதியாக அழிவு செய்ய முடியுமோ? அவ்வளவும் செய்வதே, அறிவியல்" என்னும் செருக் கில் உள்ளன அறிவியல் ஓங்கிய நாடுகள்! அந் நாடுகள், "உலக அமைதி! அமைதி!" என்று ஓயாமல் கூச்சலும் போடுகின்றன; தாங்கள் கண்ட பேரழிவுக் கருவிகளைப் பிற நாடுகள் கண்டுபிடிக்கக் கருதியும் பார்த்தல் கூடாது என்று தடைவிதிப்பதோடு, தலைப் படாமல் இருக்கிறதா என்பதைக் கரவாக ஆய்ந்து கொண்டும் உள்ளன. அவற்றுக்கு என்ன, உலக அமைதியின் மேல் அவ்வளவு அக்கறையா? அருட் பெருங்காதலா? தாங்களே உலகை ஒட்டு மொத்தமாக அழித்து ஒழிக்கக் குத்தகை எடுத்துக் கொண்டாற் போல் கொக்கரிக்கும் அந்நாடுகள்தாம் பிற நாடுகள் ஆக்கவழிக்கு அறிவியலில் தலைப்படு வதையும் தடுக்கத் தலைப்படுகின்றன.

அமைதியைக் காக்க விரும்புபவன் எப்படி இருக்க வேண்டும்? அமைதியாளனாக இருக்க வேண்டும் அல்லவோ?

நான் மட்டும், அடாவடித்தனமே உருவாகத் திரிவேன்!

நீ மட்டும் அதனைக் கண்டு கொள்ளாது அடங்கி அமைந்து கிடக்க வேண்டும் என்றால் எப்படிப்பட்ட நடுநிலைப் பார்வை?

இதோ பாருங்கள் ஒரு செய்தி; உலகுக்கு அமைதி காட்டும் அருமை முன்னோடிகளின் அழகுக் காட்சி! அந்த முன்னோடிகளுக்குள்ளேயே கரவுத் திட்டங்கள்! உலகை அழிப்பதில் ஒருவருக்கு ஒருவர் இளைத்தவரா எனப் போட்டா போட்டி!

அணுக்கருவியை ஒடுக்குவோம் என முழங்கும், அமெரிக்காவுக்கும் உருசியாவுக்கும் இடையேயுள்ள போட்டி!

"நச்சுயிரிக் குண்டுகளைத் தலைவர் எல்சினும் அறியாவகையில் ஆக்கிவைத்துள்ளதாம் உருசியா! கூறுகிறது இலண்டன் இதழ்.

நச்சுயிரிகளைப் பதப்படுத்திப் பொடியாக்கி, அதனையே குண்டுகளில் நிரப்பி, நடுவானில் வெடிக்கச் செய்தல் ஒருவகை; பொடியாகத் தூவுதல், மற்றொருவகை," இவ்விருவகைகளாலும் ஏற்படும் அழிவு எவ்வளவாம்?

200 கிலோ பொடியை வானில் தூவினால் தூவப்பட்ட ஒரு நொடியில் ஆம்; **ஒரே ஒரு நொடியில் ஐந்து இலக்கம் பேர் இறந்து போவராம்?**

எவ்வளவு பேருள்!

உலகை நடுக்கும் அமெரிக்கா, உள் நடுக்கம் கொண்டு இருக்கிறதாம் இப்பொழுது!

இனி அடுத்து என்ன?

ஒருநொடியில் பத்திலக்கம் பேரைக் கொல்லும் நச்சு ஆவியைக் கண்டு பரப்பத் துணியும் அமெரிக்கா! சும்மா இருக்குமா?

சந்தை விலை இறங்கி விடக்கூடாது என்பதற் காகத் தேயிலையையும், கோதுமையையும் கடலிலே கப்பல் கப்பலாகக் கொட்டிக், **கடலை நாறச்செய்து,** கடல் வாழ் உயிரிகளைச் சாகடித்து **மேலும் நாறச் செய்து** அந்நாற்றம் தாங்காமல் வானில் பறக்கும் பறவை களும் செத்துச் செத்து வீழச் செய்த வன்கொடுமை வல்லரசுகள் இவற்றைச் செய்யத் தயங்குமா?

பலகோடி ஆண்டாக இயல்பான வகையால் இயற்கை உருவாக்கித் தந்த உலகை, நொடிப் பொழு திலே அழித்துத் துடைக்கவல்ல அழிவியலுக்குப் பெயர் அறிவியலா? அழிவாளன் கயமையால் அருமைக்கு அருமையாம் அறிவு அடையும் இழிவு ஈது?

அறிவியலொடு அருளியலும் அமைந்த சான் றோர், இவ்வழிவுக் கூட்டத்தை அழிவுக் கருவியைக் கண்டு பிடிக்கும் கூட்டத்தை, அறிவியலை அழிவிய லுக்கு ஆக்கும் வெறி விலங்குக் கூட்டத்தைக் கண்டிக்க வும், இடித்துரைத்துத் திருத்தவும் வேண்டும். இல்லாக் கால் அப்பழி அறிவாளர்களையும் சாரவே செய்யும்.

நாடுதோறும் அறிவாளர் கூட்டம் கிளர்ந்து
அழிவியலைத் தடுத்தால் அல்லாமல்,
அறிவியல் தன் களங்கத்தில் இருந்து விடுதலை பெற இயலவே இயலாது!

அறிஞர் உலகம் எண்ணுமாக!
உலகைக் காக்குமாக!

12. முறை காவலும், முறை கேடும்

கோவலன் கொலையுண்ட பின்னர்க் கண்ணகி சேரநாடு செல்கிறார். அவர் துயர் நிலையையும் அவர் உயிர் துறப்பையும் கண்ட மலைவாணர் வருந்து கின்றனர். சில நாள்களில் ஆங்கு மலைவளம் காண வந்த மன்னவன் செங்குட்டுவனிடம் தாங்கள் கண்ட துயர்க் காட்சியை உரைத்து,

"எந்நாட்டாள் கொல்! யார்மகள் கொல்லோ?
இந்நாட் டாங்கண் நினைவினும் அறியோம்!"

என்றனர்.

தலைநகரம் சாராத மலைநில மக்கள், இத்தகைய அவலக் காட்சியொன்று தம் நாட்டவருக்கு நேர்ந்தி ராது என்னும் உறுதியால், "எந்நாட்டாள் கொல்லோ" என்று வினாவுவதுடன், இந்நாட்டவர்க்கு இந்நிலை நேராது என்பதையும் தெளிவுறுத்துகின்றனர். அந்த நம்பிக்கை தம் அரசின்மேல் மக்களுக்கு இருந்தது, நாட்டுப்புறத்து மக்களும் தம் நாட்டு ஆட்சிச் சிறப்பை அறிந்திருந்த சான்றாகிச் செங்குட்டுவன் சிறப்பை வெளிப்படுத்தும் காட்சி இது!

* * *

கா - என்பது காவற்கு அமைந்த காட்டைக் குறித்தது. காவற்காடு என்பதே 'கா' ஆகும்.

காவல் மரத்தைக் காவலனாகவே கருதிய பெருமையும் முடி மன்னர் காலமுதல் குறுநில மன்னர் காலம் வரைக்கும் கூட இருந்தது.

காவல் கடமை தவறாமல் செம்மையாகக் காவல் புரிபவனை, அக்காவல் செம்மையே காக்கும் என்பது வள்ளுவம்.

"இறைகாக்கும் வையகம் எல்லாம்; அவனை
முறைகாக்கும், முட்டாச் செயின்" (547)

என்பது அது,

செங்கோல் ஆட்சியின் இலக்கணம் இன்னதென வள்ளுவர் கூறினார். அவ்விலக்கணத்திற்கு இலக்கிய மாகச் செங்குட்டுவன் ஆட்சி திகழ்ந்ததைச் சிலப் பதிகாரம் காட்டிற்று.

* * *

இதோ! **அறிவியல் - பகுத்தறிவு - மாந்தநேயம் - ஒருமைப்பாடு என்றெல்லாம் வாய்கிழியப் பேசும் இந்நாட்டு ஆட்சி - இந்நாள் மக்கள் ஆட்சி - எப்படி உள்ளது?**

காவல் நிலையக் கொட்டடியின் இரும்புக் கதவுகள் 'கிரீச்' சிட்டுத் திறந்தன. உடலெல்லாம் ஊமைக் காயங்களாக்கப்பட்டு இருந்த, ஐம்பது வய துடைய அவளைப் பார்த்து 'வெளியே வாடி நாயே' என்று காவலன் ஒருவன் உறுமினான். அச்சத்தோடு வெளிவந்த அவளை, ஒரு காவலன் கீழே தள்ளினான். நான்கு காலவர்கள் கால் கைகளை அழுத்திப்பிடித்துக் கொண்டனர். பச்சை குத்தும் ஒருவன் பச்சை குத்தும் பொறியால் அவள் நெற்றியில் '**நான் ஒரு திருடி**' எனப் பொறித்தான். அது முடிந்ததும் 'அடுத்த நாயை இழுத்து வா' என்று கூறி, அப்படியே நால்வர் நெற்றி யிலும் 'நான் ஒரு திருடி' எனப் பச்சை குத்தினர்!

ஒரு பேருந்து நிலையத்தில் வண்டிக்காக காத் திருந்தவர்கள் அப்பெண்கள். நான்கு மாதங்களுக்கு

முன்பு நடந்த ஒரு திருட்டை அவர்கள் மேல் சூட்டினர் காவலர்.

'எதுவும் நாங்கள் செய்யவில்லை' எனக் காலில் வீழ்ந்து மன்றாடியும், காவலர் ஏற்கவில்லை.

பிறந்த மேனியாக்கி, அவர்கள் காலின் மேல் ஓர் உருளையை வைத்து, அதன் மேல் நான்கு காவலர் ஏறி நின்றனர். மூட்டு நழுவியது.

இடுப்புக்குக் கீழே தண்ணீர் விட்டு அடித்த அடியால் எலும்பு முரிவாயிற்று.

கையில் அறைந்த அறையால் விரல்கள் அசைக்க இயலா வலி கண்டன.

உடலெல்லாம் ஊதுகாயம்! நெற்றியிலே 'நான் ஒரு திருடி' என்னும் முத்திரை!

'நடந்ததைச் சொன்னால் நடப்பது வேறு' என அச்சுறுத்தினர்.

முறைமன்றத்தில் இருந்து பிணையில் வந்த அவர்களுக்கு நிகழ்ந்த முறைகேட்டை **ஊர்மக்களிடம் உரைத்தனர்.**

உயர் மன்றத்தில் காவல் துறையின் அடாவடித் தனத்தைக் கூறி வழக்குத் தொடுத்தனர் ஊரவர்.

"தாங்களாகவே பச்சைக் குத்திக் கொண்டனர்" எனக் காவல் துறைக் கயவர்கள் பச்சைப் புளுகு புளுகினர்.

"திருட்டும் கையுமாய்ப் பிடிபட்டுப் பொது மக்களால் பச்சைகுத்தப்பட்டனர்" என்றும் புளுகினர்.

உயர் மன்ற நடுவர் காவல் துறையையும் அரசை யும் கண்டித்துளார்.

இன்னொரு வழக்கில், கருப்பமுற்ற பெண் ணொருத்தியைத் திருட்டுப் புனைவு செய்து காவல் துறை நடந்துகொண்ட கயமையைக் கண்டித்த உயர் மன்ற நடுவர், "**அவளைப் படுத்திய பாட்டை அறிந் ததும், என் முதுகெலும்பே சில்லிட்டு நடுங்கியது. என் 25 ஆண்டுக்காலப் பணியில் இப்படியொரு கொடுமை நடந்ததே இல்லை!**" என்றும் கண்டித் துள்ளார்!

* * *

முறைகேடாகத் திருட்டுப் பட்டம் சூட்டிக் கொடுமை செய்த கயவர்களைக் கண்டித்தால் போதுமா? கண்டிப்பதையும் கண்டு கொள்ளாமல் அரசு நடத்தி னால், அவ்வரசும் வேண்டத்தக்கதுதானா?

குற்றமற்றவர்களைக் குற்றவாளிகள் ஆக்கும் காவல் கயவர்கள் நெற்றியில் "**திருடாதவளைத் திருடியாக்கிய திருடன் நான்**" எனப் பச்சை குத்தித் தெரு வழி நடக்கத் தூண்டுமோ முறை மன்றம்? அதனைச் செய்யத் துணியுமா அரசு?

மேலே சுட்டிய காவற் கயமை **வடக்கே நடை பெற்றது! தெற்கே தான் என்ன வாழுகிறது?** "தென் திசையைப் பார்க்கின்றேன்! அடடா! பூரிக்கிறது என் தோள்" என்று பாவேந்தர் சொல்வது போலவோ உள்ளது?

உயிரோடு இருப்பவளைச் செத்தவளாக்கியது காவல் துறை! அது கொலை செய்யாதவர்களைக் கொன்றவர்களாக்கிக் கொடுமை செய்துள்ளது. எட்டு மாதங்கள் சிறை வாழ்விலும் ஒருவர் அல்லல் பட்டுள்ளார்.

அந்நிலையில் "**நான் கொலை செய்யப்பட வில்லை - உயிரோடுதான் இருக்கிறேன்**" என்று முறை மன்ற நடுவரிடம் முறையிட்டு நாட்டைத் திகைப்பில் ஆழ்த்தியுள்ளார் ஒரு பெண். அதனை ஆய்ந்த நடுவர்கள், வழக்கின் விவரங்களையும் சூழ்நிலைகளை யும் ஆயும் போது, காவல் துறையின் நடவடிக்கைகள் சட்டத்திற்கு முரணானவை என்று தீர்மானிக்கிறோம்; குற்றம் சாட்டப்பட்ட மூவரும் ஒன்பது மாதங்களாக முறைமன்றத்திற்கு அலைந்துளர். எட்டு மாதம் ஒருவர் சிறையில் கிடந்து அல்லல் பட்டுளார். மற்றும் இருவர் பதினொரு நாள்கள் சிறையில் கிடந்துளார். முன்ன வர்க்கு ஒன்றரை இலக்க உருபாவும் பின்னவர்களுக்கு அரை, அரை இலக்க உருபாவும் தமிழக அரசு இழப்புத் தொகை வழங்க வேண்டும், ஆறு வாரங்களுக்குள் இதனை நிறைவேற்ற வேண்டும்" என்றுளர்!

அரசு தொகை செலுத்தினால் போதுமா?

பொய் வழக்குத் தொடுத்துத் தண்டித்தவர்களுக்கு என்ன தண்டனை? **'கொலைப்பொய்யர்' 'கொலைக் கயவர்'** என அவர்கள் நெற்றியில் பச்சை குத்துவார் எவர்?

இத்தகு கொடுமைகளை நாட்டில் இருந்து ஒழிக்கச் சான்றோர் மார்புதட்டி - மடிதட்டி - நிற்பரா?

கொசு ஒழிப்புக்கு - இயக்கம்!

அம்மை ஒழிப்புக்கு - இயக்கம்!

மாசு கட்டுப்பாட்டுக்கு - இயக்கம்!

கல்லாமையை இல்லாமை ஆக்க - இயக்கம்;

இவற்றினும் கொடியதாய்க், **குற்றம் இல்லாரைக் குற்றவாளியாக்கும் கொடும் கயமையை ஒழிக்க இயக்கம் வேண்டாமா?**

குறைந்த அளவில் உடனடியாகச் சிற்றூர் - பேரூர் - நகர் - மாநகர் அளவுகளில் '**அறங்காவற் குழு**' ஒன்று அமைக்க வேண்டாவா?

முறைகேடு நடந்தால் தடுக்கத்தக்க அமைப்பு ஒன்று வேண்டாவா?

அறங்காவற் குழு அறியாமல், ஒருவர் மேல் காவல்துறை வல்வழக்குக் கொண்டுவர முடியாது; கூடாது - என்னும் நிலையை உண்டாக்க வேண்டாவா?

ஊராட்சி அமைப்பு என்பதே பொய்யாய்க் கனவாய்ப் போகவைக்கும் அரசுதானா, இதனை முன்னின்று செய்யும்?

அறிவறிந்த சான்றோர் - துணிவுடைய பொது மக்கள் - மாந்த நேயத் தொண்டர் - உடனடியாக **ஈடுபட்டு அவரவர் ஊர்களில் அறங்காவற் குழு' அமைத்தல் வேண்டும்** அல்லவோ?

"**ஒரு நூறு குற்றவாளிகள் தண்டனையில் இருந்து தப்பினாலும் தப்பி விடலாம்; ஆனால், குற்றமில்லாத ஒருவன் குற்றவாளியாக்கப்பட்டு விடுதல் ஆகாது**" என்பது முறைமன்றத்தின் இறையாண்மைத் தலைமை விதி!

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்"

13. பிறன்பழியும் தன்பழியும்

“உங்கள் ஆட்சியில் ஊழல் நடந்துள்ளது; புலனாய்வு செய்தல் வேண்டும்”

“உங்கள் ஆட்சியில் ஊழல் நடக்கவில்லையா? அதனைப் புலனாய்வு செய்தல் வேண்டும்.”

இப்படி ஆண்டோரிடமும், ஆள்வோரிடமும் எதிரும் புதிரும் ஒலிக்கக் கேட்டால் என்ன பொருள்?

“ஊழல் நடந்துள்ளது; இருவரும் செய்துள்ளோம்” என்பதை ஒப்புக் கொண்டது ஆகும்.

*ஆனால், உங்கள் ஆட்சியில் ஊழல் நடந்துள்ளது என்றோ, உங்கள் பதவிக்காலத்தில் முறைகேடாகப் பொருள்தேடியுள்ளீர்கள் என்றோ குறை சொல்லப்பட்டால், **அக்குறைக்கு உட்படாத வராக இருந்தால், என்ன செய்வார்?***

“ஊழல் நிகழ்ந்ததைச் சான்றுடன் கூறுங்கள்; அவ்வூழல் நிகழவில்லை என்றால் வீண்பழிசூட்டிய உங்கள்மேல் மானக்கேட்டு வழக்குத் தொடர்வேன்!”

“பதவிக்கு வருமுன் என் சொத்துநிலை இது; யான் பதவிக்கு வந்தபின்னர் உள்ள இற்றைச் சொத்து நிலை இது; இவற்றுக்குரிய சான்றேடுகள் இவை; இவற்றை ஆய்ந்து குற்றம் என்றால் தண்டனைக்கு ஆட்படுவேன்; இல்லையென்றால் உங்கள்மேல்

வழக்குத் தொடர்வேன்" என்றால் **கறைபடாக் கையும், குறைபடாமனமும் வெளிப்படும்.** இந்திய அரசின் ஊழலும் முறைகேடுகளும், 'அதனையும் வந்துபார்' என்னும் தமிழக அரசின் ஊழலும் முறைகேடுகளும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக' வளர்நிலையிலேயே உள்ளன.!

புரட்டும் போலிமையும் பொய்ம்மையும் வஞ்சமும் ஏமாற்றுமே உருக்கொண்ட இவ்வாட்சி முறை ஒழிந்து, "வல்லாண்மைமிக்க வாய்மை அரசுநிலை ஒன்று உருவாகாதா?" என்னும் ஏக்கம் கூட நல்லோர் உள்ளத்தே எழுலாகின்றது.

* * *

அவர் நாடாளுமன்ற **அவைத்தலைவர்.**

அவர் **'பதவியேற்றபின்னர்ப் பணம் சேர்த்து விட்டார்'** என்று, நாளிதழ் ஒன்று எழுதியது.

அதுபற்றி நாடாளுமன்றத்தில் வினா எழுந்தது.

அவைத்தலைவர் என்ன செய்தார்?

தட்டிக் கழித்தாரா? இதழ் கூறியது தவறு என்றாரா?

இதழ் குறைகூறியது பற்றியோ, அவையில் வினா எழுந்தது பற்றியோ மனத்தாங்கல் கொண்டார் அல்லர்! மாறாகக், **குற்றம் தொடர்பான எல்லா விளக்கங்களையும் நாடாளுமன்றத்தின்முன் வைக்கப்போவதாகவும், அவையினர் தீர்ப்புக்கு விட்டுவிடப் போவதாகவும் உரைத்தார்.**

'உங்களைக் கூறிய குற்றம் பொய்யானது; நாங்கள் நன்கு அறிவோம்' என உறுப்பினர்கள் பலர்

அப்பொழுதே உரைத்தனர். "நாம் அவைத்தலைவரை மாசு கற்பிப்பது நாட்டையே மாசுபடுத்துவது; மேற் கொண்டு ஆய்வு நடத்தவேண்டியது இல்லை" என்று **தலைமையமைச்சர்** தடுத்துரைத்தார்.

"அவைத்தலைவர் பதவி நாட்டின் தலைவர் பதவிக்கு ஒப்பானது. பொய்க் குற்றச் சாற்றை உதறித் தள்ளலே முறை"

"இக்குற்றச்சாற்றுக்குச் சற்றேனும் மதிப்புத் தருதல் ஆகாது; தந்தால், இம்மாதிரிக் குற்றச்சாற்று களை வெளியிடவும் பரப்பவும் ஊக்கமூட்டியதாகும்"

- இவற்றை மூத்த உறுப்பினர்கள் கூறித்தடுத்தனர்.

ஆனால், அவைத்தலைவர் உறுதியை இவை அசைத்தில. அவர் கொள்கை வீறுடன் நின்றார்.

'குறை கூறியிருப்பவர் எவர் என்பதை எண்ண வேண்டும்; அவர் தகவற்றவராக இருந்தால் அவர் கூறிய குறையைப் பொருட்படுத்தாமல் ஒதுக்கிவிட வேண்டும்; தகவுடையவராகக் கூறியவர் இருந்தால், சீரிய ஆய்வு நடத்தியே ஆகவேண்டும்; **இப்பொழுது களப்பப்பட்ட குற்றச்சாற்று பொறுப்பற்ற ஓர் இதழினுடையது. ஆதலால், இதனைத் தள்ளுபடி செய்தலே தக்கது'** என்று மீளவும் தலைமையமைச்சர் வலியுறுத்தினார்.

தம்மிடம் அவையும் தலைமை அமைச்சரும் கொண்டுள்ள நம்பிக்கைக்கு நன்றி தெரிவித்த அவைத் தலைவர் குறைகூறப்பட்ட செய்தி தொடர்பான எல்லா ஆவணங்களையும் அவையில் வைப்பது பற்றிய தம் கருத்தை மாற்றிக் கொள்ள இயலாது என மறுத்து விட்டார்.

சரி! பின்னே என்ன ஆனது?

அவர் சொல்லிய ஆவணங்களோடு அவைக்கு வந்தார். ஆளுங் கட்சியர் முன்னர் ஆவணங்களை வைப்பதினும், **எதிர்க்கட்சியர் முன்னர் வைப்பதே முறை** எனக் கொண்டு அவ்வாறே செய்தார்.

அந்நிலையில் எதிர்க்கட்சியினர் என்ன செய்தனர்? என்னென்னவோ பேசினர்; ஆனால் ஆவணங்களைத் தொட்டும் பார்த்திலர்! அவைத்தலைவரின் அறமேம்பாட்டின் மேல், செம்மையின் மேல் அவர்கள் கொண்ட **நம்பிக்கைச்சீர்மை** அஃதாயிற்று.

இது என்ன கனவா? கற்பனையா?

இந்த மண்ணிலே நிகழ்ந்ததா? வேற்று மண்ணிலே நிகழ்ந்ததா?

இப்படியெல்லாம் வினவத்தோன்றும்!

இந்த இந்திய மண்ணிலே நிகழ்ந்ததுதான் இது!

அந்த அவைத்தலைவர் **உக்கும் சிங்!**

அந்தத் தலைமையமைச்சர் **இலால்பகதூர் சாத்திரி!**

அந்த மூத்த உறுப்பினர்கள் **இலோகியாவும், பகத்துசா** அவர்களும் செய்தி வந்ததும், ஆவணம் வைத்ததும் ஆகிய நாள்கள்: 239.64, 3.10.64.

அந்த மண்தானா இப்படி, முந்நூறு கோடி மூவாயிரங்கோடி முப்பதாயிரம் கோடி என ஊழல் நாற்றமெடுத்துவிட்டது.

இந்தத் தமிழ் மண்ணின் ஒருசிறு நறுமணமும்! முகர்வோமே!

"மூவாயிரம் ஏக்கர் இடம் இவருக்கு இருக்கிறது! அதனை ஒட்டி, முந்நூறு ஏக்கர் அரசுப்புறம்போக்கு இடம் உள்ளது; அதனையும் இவர்க்குத் தந்துவிட்டால் மொத்தமாகப் பெரும்பண்ணையாக்க உதவும்! இவர்க்கு உதவ வேண்டும்" என்று சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் முதல்வரை அணுகினார். பரிந்துரையார் மட்டும் அணுகினார் அல்லர்; அம்மூவாயிரத்தையும் சேர்த்தே அணுகினார்!

புண்படுத்த விரும்பாமல் பண்படுத்த விரும்பிய அம் முதல்வர், வேண்டுகைத்தாளை வாங்கி வைத்துக் கொண்டு கையெடுத்துக் **கும்பிட்டு வழியனுப்பினார்.** பின்னே அந்த உறுப்பினரைக் **கூப்பிட்டு** "ஏழையர் நாடு இது; ஏழையர்க்கு உதவ ஏழையர் வாக்குப்பெற்று ஏறியிருக்கிறோம் ஆட்சிக் கட்டில்; நீ மூவாயிரம் ஏக்கரோடு முந்நூறு ஏக்கரைச் சேர்க்கத் துணை வருகிறாய்; 'பத்துப்பத்து ஏக்கராக முப்பது ஏழை யர்க்குப் பகுத்துத் தருக' என்று வந்திருந்தால் நான் மகிழ்ந்து பொங்கிப் போயிருப்பேன்; இப்படி வேலை யில் இனித் தலையிடாதே" என்றார். **அக்குணக் குன்றம்! அவர் அலை கடல் ஓரத்தில் துயில் கொண் டிருக்கும் பேரறிஞர் அண்ணா அந்த உறுப்பினர் பெயர்? அவர் பெயர் என்ன வேண்டியிருக்கிறது? செய்திதானே வேண்டும்! "அந்தத் தமிழ் மண்ணில் தான் இன்று இந்த மூக்கடைக்கும் முடை நாற் றமா?"** என்று எண்ணத் தோன்றுகின்றதா? **தோன்ற வேண்டுவார்க்குத் தோன்ற வேண்டுமே இது?**

> "பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
> திறன்தெரிந்து கூறப் படும்." (186)

என்பது நம் மறை.

14. கடிந்தவை கடிதல்

ஒருநாள் இரவு! அடைமழை!

ஒரு சிறிய வீட்டின் கதவைத் தட்டுகிறார் ஒருவர். "அடிகளே, ஒருவர் உள்ளே வர இடமுண்டோ?" என வினவுகிறார். உள்ளே இருந்து, 'அடிகளே ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்" என்று ஒலி வந்தது. உள்ளே போனார் வெளியே நின்றவர்.

பின்னரும் ஒருவர் வந்தார். அவர் கதவைத் தட்டி "அடிகளே ஒருவர்க்கு இடமுண்டோ?" என்றார். "அடிகளே, ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்" என வீட்டின் உள்ளே இருந்து ஒலி வந்தது. அவர் உள்ளே சென்றார். "உள்ளம் இருந்தால் இடம் தானே உண்டாகும்" என்பதை விளக்கும் செய்தி இது.

இது முதலாழ்வார் (பொய்கையார் பூதத்தார் பேயார்) மூவர் வரலாற்றில் இடம் பெறுவது. இது பழஞ்செய்தி; புதுச்செய்தி ஒன்று வருமாறு;

அவர் பெயர் இராமச்சந்திரர். மாவட்டத் துணை ஆட்சியாளர். மதுரையில் இருந்தவர். புலவர் தோழர். சான்றோர்க்கு அன்பர்.

அருமையில் எளிமையராம் இறைமையர். விருதுநகரில் இருந்து மதுரைக்குத் தொடர்வண்டி முதல் வகுப்பில் வந்துகொண்டிருக்கிறார். வண்டி திருமங்கல நிலையத்தில் மெல்லச் சென்றது. அது ஆங்கு நில்லாத விரைவு வண்டி. அணிலெனத் தாவி

ஏறிவிட்டான் கல்லூரி மாணவன் ஒருவன். அதே பெட்டியில்தான் இராமச்சந்திரர் இருக்கிறார். அவர்தம் ஏவலரும் மார்புப் பட்டியுடன் நிற்கிறார். சீட்டு வாங்காமல் ஓடும் வண்டியில் ஏறியது அதிலும் பெரிய அலுவலர் இருக்கும் முதல் வகுப்புப் பெட்டியில் ஏறியது கல்லூரி மாணவரைக் கலக்கியது.

அலுவலர் இராமச்சந்திரர் கையசைத்துப் பெட்டிக்குள் வந்து அமர அழைத்தார். ஆனால் மாணவர்க்கு அச்சமும் நாணமும் அலைத்தன. இறங்கி விடுவதற்கு முயன்றார். வண்டி மதுரை மீனாட்சி ஆலைப் பகுதிக்கு வந்துகொண்டிருந்தது மாணவர் இறங்கத் துடிப்பதைக் கண்டு "இறங்காதே இறங்காதே" எனத் தடுக்க வந்தார் இராமச்சந்திரர். மாணவன் இறங்கி அணிலெனத் தாவி ஓடிவிட்டான். இராமச் சந்திரர் வாயிலை அடுத்துவந்த அளவில், பெட்டிக் கதவு பிடரியில் அடித்துக் குப்புற வீழ்ந்தார். அருளாள ராக இராமச்சந்திரர் வீடு பேறுற்றார்.

பொன்னைக் கொடுப்பார் சிலபேர்கள்
பொருளைக் கொடுப்பார் சிலபேர்கள்
தம்மைக் கொடுப்பார் உளராமோ
தாவி வீழ்வோன் உயிர்காக்கத்
தம்மைத் தந்தோர் உளரம்மா
தகைசால் அருளின் தோன்றலென
மன்னு இராமச் சந்திரராம்
மாண்புப் பெரியர் அவரம்மா"

எனப் பாடு புகழ் பெற்றார்.

அண்மையில் நிகழ்ந்ததும், ஏட்டியும் போட்டியு மாகப் பேசப்படுவதும், சட்டமன்றம் ஏறிச் சது ராட்டம் செய்வதுமாகிய நிகழ்ச்சி ஒன்று! அது நாடறி பொருளாம்.

தனியார் வான ஊர்தி! முதல்வர்க்காகக் கூலிக்கு எடுக்கப்பட்டது! ஆனால், அதற்கு முன்னர் அவ்வூர்தியில் செல்வதற்குச் சீட்டு வாங்கியிருந்தவர் உண்டாம். அச்சீட்டுகள் மறுக்கப்பட்டு முதல்வர்க்கென்றே ஊர்தி ஒதுக்கப்பட்டுவிட்டதாம்! ஒதுக்கப்பட்டதை அறியாமல் நடுவண் அமைச்சர் ஒருவர் ஓடிப்போய் ஊர்தியில் ஏறியும் விட்டாராம்!

பறக்க இருந்த ஊர்திக்குள் பறந்து தாவுமுன், தாம் ஏறிப் போகக் கூடியதுதானா அது என்று அறியாமல் - கேளாமல் - ஏறிய பெருமை இருக்கிறதே! அது மிகப் பெரும் பெருமையே!

சரி! ஏறிவிட்டார்! முன்வழியா? பின்வழியா? கேட்டேயா? கேளாமலேயா? இவை என்ன பெரிய செய்திகளா? தெரிந்த முகம் தானே! வணங்கிய கை தானே! அவரே உண்மை உணர்த்தப்பட்டு இறங்குவதாக இருந்தாலும், "அதனால் என்ன; இடம்தான் உள்ளதே! இருங்கள் என்று இணைத்துக் கொண்டிருந்தால் ஓர் எடுத்துக்காட்டும் பண்பாடுமாம் செய்தியாக இருந்திருக்கும். ஆனால் அப்படியெல்லாம் ஆளுபவர்க்குள் நாகரிகம் வருவதில்லை என்பதுதானே நடைமுறையாகி விட்டது! எங்கும் அரசியல் - எதிலும் அரசியல். அதிலும் கட்சி அரசியல் அறிக்கை அரசியல் - வரிசை கட்டிப் - "பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் கொல்குறும்பும்" உள்ளதாம் அரசியல் - போக்கினை நோக்கும் போது **நிகழ்கால இளைய தலைமுறைகளின் எதிர்காலப் பண்பாடுகள் எப்படித் தான் இருக்குமோ?** என்று இரங்கவே வேண்டியுள்ளது. நல்லதாகக் காட்ட முடியாமல் போனாலும் அல்லதாகத் தோன்றாமலாவது இருக்கக் கூடாதா?

பண்பாட்டால்தான் உலகம் வாழ்கிறது என்ப தற்குப் பாராள்பவரே எடுத்துக்காட்டாக இல்லை என்றால் படிக்கும் இளையர் நிலை என்னாவது? எதிர் கால அரசியல் என்பது எதுவாக இருக்கும்?

"கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்" (658)

என்பது நம் மறை.

உயர்ந்தோரால் விலக்கப்பட்டவற்றை விலக்கா மல் செய்தவர்க்கு அச்செயல் முடிந்துவிட்டாலும் துன்பமே உண்டாகும்.

கட்சி - அரசியல் - சார்பு ஆகியவற்றுக்கு அப்பாற் பட்டுப் பொது நலம் போற்றும் சான்றோர் அமைப்பு ஒன்று கட்டாயம் வேண்டும். அது துணிந்து அப்போது தக்கதைப் பாராட்டலும், தகவில்லதைக் கண்டித்தலும் கடனாகச் கொள்ளல் தேவை. அந்த நிலைமையே நாட்டு நலத்தைக் காப்பது என்பதால் தான்,

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்" (996)

என்றும்,

"சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை (990)

என்றும் தெய்வப்புலவர் அருளினார். அத்தகைய அவையைத் தங்களைக் காக்க வந்த "காவல் அமைப்பு" என்று அரசியல் கட்சிகள் எண்ணி மதிக்கவும் இப் பொழுதேனும் உணர்வு உண்டாகுமானால் பொது நலம் பொலியுமாம்.

❖❖❖❖



கடவுள்வெறி சமயவெறி
கன்னல்நிகர் தமிழுக்கு
நோய்நோய் நோயே!

இடைவந்த சாதிஎனும்
இடர்ஒழிந்தால் ஆள்பவள்நம்
தாய்தாய் தாயே!

கடல்போலும் எழுக!கடல்
முழக்கம்போல் கழறிடுக!
தமிழ்வாழ் கென்று!

கெடல்எங்கே தமிழின்நலம்!
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க!

- பாவேந்தர்

அமிழ்தம் பதிப்பகம்

எ4, மாதவி குடியிருப்பு
5, டாக்டர் தாமசு சாலை
தியாகராயர் நகர்
சென்னை - 600 017